Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 15 (28.4.94) வியாழக்கிழமை ஓசை 69

## க. பொ. த. (சா|த) பரீட்சையில் கணிதத்தில் குறைந்தளவினரே சித்தி

சண்டிலிப்பாய் கோரட்டத்திலுள்ள 18 பாடசாலைகளில் பெறப்பட்ட 1993 க. பொ: த. (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வின்படி, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மிகக் குறைந்தளவு தொகையினரே சித்தியடைந்துள்ளமை தெரியவந்துள்ளது இப் பகுப்பாய்வின்படி கணித பாடத்தில் 29 சதவீதத்தினரும் ஆங்கில பாடத்தில் 17 சதவீதத்தினருமே சித்தியடைந்துள்ளனர். தமிழ் மொழியில் 73 சதவீதத்தினரும், விஞ்ஞான பாடத்தில் 35 சதவீதத்தினரும் சைவ சமயபாடத்தில் 83 சதவீதத்தினரும், கிறிஸ்தவ (றோ. க அல்லாதது) பாடத்தில் 80 சதவீதத்தினரும், கிறிஸ்தவ (றோ. க) பாடத்தில் (6ஆம் பக்கம் பார்க்க)

# குண்டுவெடிப்புக்களை தடுக்க கொழும்பில் தீவிர பாதுகாப்பு

## ஹோட்டல் நிர்வாக அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சில் மாநாடு

(கொழும்பு)

இம்மாத ஆரம்பத்தில் கொழும்பு ஹோட்டல்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கள் போன்று இனிமேலும் நடைபெறாதிருப்பதை உறுதி செய்வதற்கான சாத்தியமான சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது

இப் பாதுகாப்பு ஏற்பாடுகள் புலனாய்வுத்துறை, பாதுகாப்புத்துறை அமைப்புக்கள் மற்றும் கிராமிய தொழிற்துறை அமைச்சும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

அத்தோடு பாதுகாப்பு அமைச்சு சகல ஹோட்டல்களின் முகாமைத்துவ அதிகாரிகளை மாநாடொன்றிற்கு அழைத்து ஹோட்டல்களின் அதிகூடிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தை (6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்தடை வலயத்தை நீக்க பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

### அமைச்சர் பி. தயாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

தலைமன்னாருக்கும் திருகோணமலைக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் உள்ள தடைவலயத்தை நீக்க பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்து மறுத்து வருவதாக கொழும்

இது தொடர்பாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரட்ண கருத்து வெளியிடுகையில் கடல் வலய தடையை அகற்றுவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுத்தான் தீர்மானிக்க வேண்டும்.

றும் எனக் கூறமுடியாது. இது முற்றிலும் பாதுகாப்பு அமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயம், பாதுகாப்பு அமைச்சுடன் புனர்வாழ்வு அமைச்சு பேச்சுக்கள்

## அருள்தாசின் விபரங்கள் கனடாவிடம் பெற முயற்சி

கொழும்பு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அருள்தாசுடன் மேலும் பலருக்கு தொடர்பு இருக்கலாம் என பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். ஒரே சமயத்தில் பல இடங்களில் குண்டுகள் வெடித்ததினால் இதனுடன் பலரின் தொடர்பு இருப்பது புலனாகிறது என தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்புகள்தொடர்பாக புதிய திருப்பங்கள் விசாரணையில் ஏற்பட்டு வருவதாகவும் அருள்தாசின் விபரங்களை கனேடிய பொலிசாரிடம் சிறிலங்கா அரசு கோரியுள்ளது எனவும் தெரியவருகிறது.

## லொறிக்குள் குண்டு கண்டுபிடிக்கப் பட்டதாம்

### ஐவர் கைதாகினர்

(வவுனியா)

வடபகுதியிலிருந்து கொழும்பிற்குச் சென்று கொண்டிருந்த லொறியொன்றிலிருந்து குண்டொன்று கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாண்டிக்குளத்தில் இராணுவத்தினர் இந்த லொறியைச் சோதனையிட்டபோதே லொறியினுள் சக்தி வாய்ந்த குண்டொன்று கண்டுபிடிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்புப்படை வட்டாரங்கள் கூறின

## மாவட்ட அமைப்பாளராக ஹேமா, சஜித் நியமனம் ?

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசாவையும் அவரது மகன் சஜித் பிரேமதாசாவையும் ஐ. தே. க மாவட்ட அமைப்பாளர்களாக நியமனம் செய்ய கட்சியில் சிலர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்

எனினும் இவர்கள் இருவரையும் எந்த மாவட்டத்தில் நியமிப்பது என்ற இரு கருத்துகள் கட்சியில் நிலவுகிறது. சிலர் கொழும்பில் கட்சி அமைப்பாளர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்கின்றனர் வேறு சிலரோ சஜித் பிரேமதாசாவை அம்பாந்தோட்டை ஐ. தே. க அமைப்பாளராக நியமிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். கட்சிச் செயற்குழு இது குறித்த இறுதி முடிவை விரைவில் எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

## கண்டி கேந்திர இடங்களில் பொலிசார் திடீர் சோதனை

(கொழும்பு)

கண்டி நகரில் கடந்த சில

கின்றனர்.

அடையாள அட்டை இல்

## உற்பத்தி எழுச்சிப் போட்டி

வடமராட்சி வடக்கு, கிழக்கிற்கான கடற்புலிகள் பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம் நடாத்தும் உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகள் இன்று காலை 9 மணியளவில் பொலிகண்டி கடற்றொழில் அபிவிருத்தி அமைப்பு மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் கடல் போட்டிகள், கைத்தொழிற் போட்டிகள், விவசாயப் போட்டிகள் என்பன நடைபெறும்

## கப்பலில் செல்லும் நோயாளருக்கு

(யாழ்ப்பாணம்)

வியாழக்கிழமைகளில் கப்பலில் கொழும்பு செல்வதற்கு ஒழுங்குசெய்யப்பட்ட நோயாளர்களை அந்தந்த வியாழக்கிழமைகளில் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் என்பவற்றுடன் மதியம் 12.00 மணிக்கு முன்பாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு சமுகமளிக்கும்படி பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி ஒழுங்கில் ஏதாவது மாற்றம் ஏற்படின் அது உடனடியாகத் தெரிவிக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## கலிபர் தாக்குதல்

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் நேற்று முன் தினம் இரவு 8 00 மணியளவில் இப் பகுதிக் கடலில் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி விட்டுவிட்டு இரு தடவைகள் துப்பாக்கி வேட்டுக்களையும் கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டது. அச்சமயம் சிறிலங்காவின் ஹெலி ஒன்றும் பலதடவை வானத்தில் வட்டமிட்டுச் சென்றது,

## வட்டமிட்ட விமானம்

(தொல்புரம்)

சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்றுக் காலை 6 20 மணியளவில் சுழிபுரம், பொன்னாலை கரையோரப் பகுதிகளைஅண்மித்த மக்கள் குடியிருப்புக்களை நோட்டமிட்டுச் சென்றது. அன்றைய தினம் வலி மேற்குப் பகுதிகளின் வான் பரப்பிலும் ஏனைய பகுதிகளிலும் பகல் வேளைகளில் பரவலாக குண்டு வீச்சு விமானங்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்டதை அவ

(கொழும்பு)

கண்டி நகரில் கடந்த சில நாட்களாக பொது மக்கள் அதிகமாக நடமாடும் பொதுச் சந்தை, பஸ்நிலையம், கச்சேரி, புகையிரத நிலையம், பிரதான வீதிகள் ஆகிய இடங்களுக்கு வாகனங்களில் திடீரென வந்திறங்கும் பொலிசார் வீதியில் செல்வோரை இடைநிறுத்தி அவர்களது பொதிகள் மற்றும் அடையாள அட்டைகளை பரிசீலிக்கின்றனர்.

அடையாள அட்டை இல்லாதவர்களிடம் வேறு அத்தாட்சி ஆவணங்கள் கோரப்படுகின்றன. இவர்களில் சிலர் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்படுகின்றனர். மக்கள் அடையாள அட்டைகளுடன் நடமாட வேண்டும் என கண்டி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் பொலிசார் கொலை

## சுற்றிவளைத்து தேடுதலில் முஸ்லிம்கள் கைது

ஏறாவூரில் பொலிசார் ஒருவர் பஸ்ஸில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டு அவரின் ஆயுதம் பறித்து செல்லப்பட்டதையடுத்து இப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இப் பகுதியில் பல முஸ்லிம்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர். கொலைக்கும் முஸ்லிம் இளைஞர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே முஸ்லிம்கள் படையினரால் கைதானதாக தெரிவிக்கப்படுகிறது.

## வடமராட்சி கிழக்கில் பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் ரோந்து சென்ற கடற்படையினர் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள்மீதும் கரையோரக் குடியிருப்புகள் மீதும் கடும் பீரங்கித் தாக்குதல்களை மேற் கொண்டதில் மீனவர்களின்கட்டுமரங்கள் சிலசேதமடைந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படையினரின் இத் தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் நடைபெற்றதுகட்டைக்காடு பகுதியில் இருந்து காங்கேசன் துறை நோக்கி வந்துகொண்டிருந்த 'டோறா' விசைப் படகில் இருந்து அரை மணி நேரமாக தொடர்ச்சியான தாக்குதல் நடைபெற்றதில் இச் சேதம் ஏற்பட்டுள்ளது.

இத் தாக்குதல் நடைபெற்றபோது மீன் பிடித்துக் கொண்டிருந்த பல மீனவர்கள் கடலில் குதித்து நீந்திக் கரையை வந்து சேர்ந்தனர்

தாளையடி செம்பியன்பற்று மாமுனை கடற்பகுதிகளில் வைத்து இப் பீரங்கித் தாக்குதல்கள் நடைபெற்றதாகவும் இத்தாக்குதலுககு அஞ்சி மீன்பிடி பொருள்களை கடலில் கைவிட்ட நிலையில் கரையை வந்து சேர்ந்ததாகவும், கடற்படையினரின் இக் கெடுபிடியினால் அன்று தமது தொழில் முழுமையாக பாதிக்கப்பட்டதாகவும் தப்பி வந்த மீனவர் ஒருவர் தெரிவித்தார். (யோ)

தடைவலயத்தை நீக்க பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்து மறுத்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தடையை அகற்றுவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுத் தான் தீர்மானிக்க வேண்டும். எப்போது இத்தடையை பாதுகாப்பு அமைச்சு அகற்றப்பு அமைச்சுடன் புனர்வாழ்வு அமைச்சு பேச்சுக்கள் எதையுமே நடத்தவில்லை என அவர் குறிப்பிட்டார்.

# யாழ். செல்வதற்கான அனுமதியை மீண்டும் ஜனாதிபதியிடம் கோருவேன்

### அமைச்சர் தொண்டமான் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் செல்வதற்காக தாம் ஜனாதிபதி விஜேதுங்காவின் அனுமதியை மீண்டும் கோரப் போவதாக அமைச்சர் தொண்டமான் கனடா எம். பிரிம் மேர்பிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கனேடிய எம். பி அமைச்சர் தொண்டமானை இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு கலந்தாலோசனை செய்ய கனடா வருமாறு மீண்டும் அவருக்கு எழுதிய கடிதத்திற்கு அமைச்சர் எழுதிய பதில் கடிதத்திலேயே தொண்டமான் தனது யாழ் விஜயம் குறித்து பிரஸ்தாபித்துள்ளார்.

முன்னதாக அமைச்சர் தொண்டமான் கனடாவிற்கு செல்ல ஜனாதிபதி அனுமதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் சந்திரிகாவின் வெற்றி உறுதி

### தேசிய புலனாய்வு பிரிவினர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளருக்கு எதிராக மேல் மாகாண சபை முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க போட்டியிட்டால் நான்கு லட்சம் வாக்குகளை அவர் மேலதிகமாக பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக தேசிய புலனாய்வுத்துறையினர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஐ. தே. கவின் அரசியல் உறுதிப்பாடு தொடர்பாக ஆய்வொன்றை நடத்திய தேசிய புலனாய்வுத்துறையினர் இம் மாதம் 7 ஆம் திகதி சமர்ப்பித்த தமது ஆய்வறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளனர். இத் தேசிய புலனாய்வுத்துறை முன்னதாக தென்மாகாண சபை தேர்தல்

[6ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். மாவட்டத்தில் மீண்டும் கொலரா பரவ ஆரம்பிக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீண்டும் கொலரா நோய் பரவ ஆரம்பித்துள்ளது. கடந்த சில தினங்களில் பலர் இந்நோய்க்குள்ளாகியுள்ளனர்.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இந்நோயினால் யாழ். மாவட்டத்தில் பலர் இறந்தனர் என்பது தெரிந்ததே.

சில மாத இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இந்த நோய் தீவிரமாகப் பரவ ஆரம்பித்துள்ளது.

சமீப நாட்களில் மட்டும் சுமார் பதினைந்து பேர் யாழ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன் கிழமை மட்டும் இந்த நோய்க்குள்ளாகியுள்ளனர் எனக் கருதப்பட்டு மூன்று பேர் யாழ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[6ஆம் பக்கம் பார்க்க]

னடியாகத் தெரிவிக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (பா)

னங்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (41)

## ஹேமாவை இணைப்பதா? அமைச்சர்களுடன் பேச்சு

### டி. பி. விஜேதுங்கா நடத்தினார்

திருமதி ஹேமா பிரேமதாசாவை ஐ தே கவில் இணைப்பது குறித்து ஜனாதிபதி விஜேதுங்கா சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடன் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக ஜனாதிபதி சில அமைச்சர்களுடன் தனியாகப் பேசியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமதி ஹேமா பிரேமதாசாவை ஐ- தே- கவில் இணைப்பதை எதிர்த்து வரும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் பிரேமதாசாவின் புதல்வர் சஜித் பிரேமதாசாவை கட்சியில் இணைக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதே வேளை ஐ- தே கவின் சிரேஷ்ட பிரமுகர் ஒருவர் கொழும்பில் உள்ள தனது வீடுளை விற்றுவிட முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்.

## வட-கிழக்கு பிரச்சினைக்கு அரசிடம் தீர்வு இல்லை

### - பெலன்வில விமலரட்ண நாயக்கதேரோ

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் போரிற்கு முடிவு காண அரசிடம் அரசியல் தீர்வு எதுவும் கிடையாது இந்நிலையினால் ஜெனரல் கொப்பேகடுவ போன்ற திறமையானவர்களை இழக்க வேண்டியுள்ளது என சிறிஜெயவர்த்தன புர பல்கலைக்கழகத்தை சேர்ந்த டாக்டர் அதிவண. பெலன்வில விமலரட்ணநாயக்க தேரோ தெரிவித்தார்.

ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் வாழ்க்கை குறித்த நூல்வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் திவயின சிங்களப்பத்திரிகை நிறுவனம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

## வடமராட்சி பகுதிகளில் கொலரா பரவுகிறது

(வடமராட்சி)

கொலரா நோய்க்கு ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும்இலக்காகி சிகிச்சைபெற்று வருகின்றனர். வல்லிபுரக் குறிச்சியில் உள்ள குடும்பத்தினரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்களை பராமரித்துக் கொண்டிருந்த பெண் ஒருவரும் கொலரா நோய்க்கு உள்ளானார். இவரது குடும்பத்தில் ஐவர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவரது தகப்பனாரைத்தவிர மற்றைய நால்வரும் யாழ். போதனா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### தவறிவிட்டது

23 - 04 - 94 காலை சங்கானை - கிளாலிக்கு பயணம் செய்யும்போது சவுந்தரநாயகம் புஸ்பரெத்தினம் என்பவருடைய அடையாள அட்டையும் (இல. 287480725V) வடபகுதிக்கு வெளியே செல்லும் பாஸ், றேஸ்/கலர்பேர்ஸ் ஆகியவை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(8139)

### சிகை அலங்கரிப்பாளர் தேவை

குருநகரில் முன்னணியில் இருக்கும் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றுக்கு ஓர் இளம் சிகை அலங்கரிப்பாளர் (தொழில் திறமையுள்ள) உடன் தேவை! நேரில் வரவும் மயூரா சிகை அலங்கரிப்புநிலையம் கடற்கரைவீதி (ஆஸ்பத்திரி முன்பாக) குருநகர் யாழ்ப்பாணம்.

(சி 9281)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளவும். உங்கள் கோழிகளைச் சந்தைப்படுத்தவும், சுவையருவி கோழிப் பண்ணை லெப் கேணல் இராசன் தெரு, யாழ்ப்பாணம்.

(சி-9278)


### மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய 14-வது சுற்று மண்ணெண்ணெய் தற்போது விநியோகிக்கப்படுகின்றது. பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெய் லீற்றர் இருபத்தைந்து ரூபா விலையில் சங்கத்தில் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள கிளையொன்றில் இவ்விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது

(22)

### அநாதரவான நிலையில் கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு நகரின் மத்தியில் பிரபல கல்லூரி ஒன்றின் முன்பாக கைக்குண்டு ஒன்று கைவிடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இராணுவத்தின் குண்டு வெடிக்க வைக்...

# எமது விடுதலைப் போராட்டம் எந்த நாட்டிலும் தங்கி நிற்கவில்லை

**- இளம்பரிதி**

(வடமராட்சி)

எமது விடுதலைப் போராட்டம் எந்த ஒரு நாட்டினதும் உதவியை நாடி நிற்கவில்லை. விடுதலைப் போராட்டம் யாருடைய உதவிகளையும் எதிர்பார்க்காமல் எமது சொந்த முயற்சியிலேயே நின்று வருகிறது. எமது போராட்டம் உலகத்தில் ஒரு புதிய கோட்பாட்டை எடுத்துள்ளது சர்வதேச ரீதியில் எமது போராட்டம் உயர்ந்து வளர்ந்து நிற்கின்றது.

அல்வாய் வடக்கு சிற்றூர் பொறுப்பாளர் திரு. கிண்ணியன் தலைமையில் புலோலி கிழக்குஉத்திராவத்தை ஆலய முன்றலில் சித்திரை மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் நினைவாக பருத்தித்துறை வட்டத்தில் நடைபெற்ற மாவீரர் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் திரு. இளம்பரிதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்தபோது அன்று இருந்த இந்தியத் தூதுவர் டிக்சிற் எமது போராட்ட வளர்ச்சியை சின்னாபின்னமாக உடைக்க முற்பட்டவர். அதற்காக இந்தியப் படையைத் தயார் செய்தவர். ஆனால் எமது போராட்டம் உடைந்தோ, அழிந்தோ போகவில்லை. ஆனால், இன்று ஓய்வு பெற்றுவிட்ட அந்த தூதுவர் புலிகளை வெல்ல முடியாது. தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர் திரு. வே. பிரபாகரன் தான் என்று அண்மையில் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்திருந்தார். இப்பொழுது டிக்சிற் காலம் கடந்த ஞானம் பெற்றிருக்கிறார் என்றுதான் கூறமுடியும். இது ஒருவகையில் பார்க்கும் போது உலக நாடுகளில் எம் மீது ஒரு எதிர்ப்பை உண்டு பண்ணுகின்ற நடவடிக்கையாகவும் இருக்கலாம் எனக் கருதமுடிகிறது.

ஆயுதப் போராட்டம் மூலம் தான் எமது இலக்கை நாம் பெற்றுவிட முடியும். இந்த உண்மை கடந்த கால அரசியல் வாழ்க்கை மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது. மூதாதையர்கள் முன்னர் நடாத்திய போராட்டங்களில் ஆயுதங்களை ஏந்தினார்களா? சிங்கள எதிர்ப்புப் போராட்டம், கச்சேரியில் மறியல் போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம் என்பன அகிம்சை வழியில் நடைபெற்றன.

தமிழீழம் பிறப்பதை இந்தியா விரும்பவில்லை தமிழீழம் ஒன்று உருவாகினால் தனது நாட்டுக்கு ஆபத்து என தூதுவர் டிக்சிற் கூறுகிறார். இந்த டிக்சிற்றின் கருத்து ஆபத்தானது. இதில் நாங்கள் சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

வடபுலத்தில் சிங்கள இராணுவம் பாரிய யுத்தத்தை நடத்த திட்டமிட்டு தயார் படுத்தி வருகிறது தமிழனுக்கு அடித்தால் தான் டி. பி யின் பதவி நீடிக்கும், செல்வாக்கு நிலைக்கும். அதே போல், ஜெரி டி சில்வாவும் பதவியில் நிலைத்துக்கொள்ள முடியும். இதனை வைத்து சிறிலங்கா அரசு தமிழனைத் தாக்க முயற்சிக்கிறது. எதிரி எங்கள் மீது எடுக்கப் போகின்ற படையெடுப்பு தற்காலிக வெற்றிக்காக எங்கள் மீது அனர்த்தங்களை ஏற்படுத்த முயல்கிறது. இதற்கு நாங்கள் இடம் கொடுப்போமேயானால் எதிரி நிரந்தர வெற்றிக்கு நகருவான் இதற்கு நாங்கள் விட்டுக் கொடுக்க முடியுமா? ஆட்பலம் இல்லாத நிலையில் வெல்ல முடியாது. மக்கள் விழிப்பாக நிற்பார்களேயானால் எங்களுக்கு பலம் ஏற்படும்.

எமது போராட்டத்தின் கவசம் மக்கள். தென் தமிழீழத்திலே எமது போராளிகளுக்கு அங்குள்ள தமிழ்மக்கள் இயன்றவரை உதவுகின்றனர் இராணுவ முகாம்கள் அடுக்கடுக்காக இருக்கின்ற போதிலும் அங்குள்ள மக்களின் உதவியினால் எமது போராளிகள் அப் பகுதியில் பல இராணுவ, பொலிசாரை அழித்து வருகின்றனர் எமது போராட்டம் ஆரம்பிக்கும்போது எமது மக்களிடம் நம்பிக்கையீனம் ஏற்பட்டது. ஆனால் தற்போது எமது மக்களிடம் எமது போராட்ட வடிவம் நன்றாக புரிகிறது என்றார்

மற்றும் பயிற்சிப் பள்ளி ஆசிரியர் திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன், பருத்தித்துறை வட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி யாழரசி, யாழ்-மாவட்ட மாவீரர் பொறுப்பாளர் திரு- எழிலன் ஆகியோரும் நினைவுரை நிகழ்த்தினர்-

# பலத்த நிதி நெருக்கடியில் மட்டு மாநகர சபை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபை பலத்த நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாக மாநகர ஆணையாளர் கே. கணபதிப்பிள்ளை கூறியுள்ளார்.

ஊழியர்களின் மாதாந்தசம்பளமாக பத்து லட்சம் ரூபா வரை செலுத்த வேண்டியிருப்பதாகவும், எனினும் இதில் ஐந்தரை லட்சம் ரூபா வரை மட்டுமே உள்ளூராட்சி திணைக்களத்தால் மீளளிக்கப்படுவதால் மீதித் தொகையை மாநகரசபையே பொறுப்பேற்று வருவதாகவும், நாற்பதுலட்சம் ரூபாவரையில் சோலை வரி மூலம் நிலுவையாக இருக்கின்றபோதும் தற்போதைய நிலையில் இதனை அறவீடு செய்ய முடியாது இருப்பதாகவும் இவற்றினால் நிதி நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

அத்துடன் மாநகர சபைக்கென நிரந்தர ஆணையாளர் நியமிக்கப் படவில்லையென்றும், கணக்காளர், சிவில் பொறியியலாளர், அதிசிறப்பு எழுதுநர் தமிழ் சுருக்கெழுத்தாளர், முதலாம்தர எழுதுநர் போன்ற பல பதவிகளும் வெற்றிடமாக இருப்பதால் சபை சிறப்பாக செயற்பட முடியாதிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்

### கடலுணவு பதனிடல் பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


1994இல் முறைசாரா கல்வித் திட்டத்தின்கீழ் வழமையாக நடைபெற்ற திட்டத்தின்கீழ் ''கடலுணவு பதனிடல்'' எனும் பயிற்சிநெறி இவ்வாண்டு ஆரம்பமாகவுள்ளது.

இது சம்பந்தமான விளம்பரம் அடுத்தவாரம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் என யாழ் கல்வித் திணைக்கள தொழில்நுட்பப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (பா)


மண்ணை ...த்துவதுமல்லாது சேதனப் பசளைகள் பயிரைப் பதப்படுத்துவதாகவும் இரசாயன உரமிட்டு வளரும் பயிர்களிலும் பார்க்க வீரியம் கொண்டதாகவும் வளருகின்றது. உதாரணமாக மிளகாயை எடுத்தால் இரசாயன உரம் மட்டும் இருக்கும்போது பயிர் மென்மையடைந்து பயிர் பயங்கரமான இலைச்சுருள் நோயினால் பாதிக்கப்படுகின்றது- ஆனால் சேதனப் பசளைகளையும் இரசாயனப் பசளைகளையும் சேர்த்துப் பாவித்தல் நோய் நொடிகளையும் எதிர்த்துவளரும் அத்துடன் விளைவும் 20-30 வீதம் ஆக அதிகரிக்கின்றது.

-தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்


## கண்ணீர் அஞ்சலி



**தியாகராஜா பாலச்சந்திரன் (றபாஸ்)**

(மூதூர், மல்லிகைத்தீவு)

பிறப்பு 20.8.1969 இறப்பு 25.4.1994

பாலா வசந்தம் காண வேண்டிய நீ வாழ்வை முடித்துக்கொண்டாய்
பாசமான தோழர்களை பரிதவிக்க விட்டுவிட்டாய்
வாடவேண்டிய மலரல்ல நீ வாழவேண்டிய மலர்
சரப்பந்தாட்டத்தை கரை கண்டவன் நீ
காலன் கயிற்றில் கழுத்தை கொடுத்ததேனோ
கண்ணிமைக்கும் நேரத்தினுள் உன்னுயிர் பிரிந்ததையா
கலங்குகின்றோம் உன் நண்பரெல்லாம் கதறுகிறோம்
கடைசி வரை உன் நினைவு அழியாது

# கூட்டத்தில் பங்கேற்க அழைக்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 அமைச்சர்கள் பங்குபற்றும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்திற்கு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் அழைப்புவிடுக்கப்படவில்லை.

இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வினவப்பட்டபோது இது மேலிட உத்தரவு எனத் தெரிவிக்கப்பட்டதாம்.

மாவட்டத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பாக நடத்தப்படும் முக்கியமாநாட்டிற்கு அதுவும் 16 அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டிற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படாதது இதுவே முதல்முறையாகும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


# உடன் தேவை

(1) கணக்கு பதிவுநர் (Book-Keeper)
(2) மின் பிறப்பாக்கி (Generator) மின் உபகரணங்கள் பராமரிப்பாளர்
(3) பாதுகாவலர்கள்
(4) பரிமாறுனர் (சப்பிளையர்)

1—3 பதவிகளிற்கு 40 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது;


# ஆளுநருக்கு எதிராக கூச்சல் போராட்டம்

**பொ. ஐ. மு. செயலர் எச்சரிக்கை**

(மாத்தறை)

தென்மாகாண ஆளுநருக்கு எதிராக கூச்சல் போராட்டம் நடத்தப்படும் என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி. ... முற்பணமாக முதலில் 1000 ரூபா வேனும் வழங்கப்பட வேண்டுமென மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட கோரிக்கை விடுத்துள்ளார். இது சம்பந்தமான ...

இதனையடுத்து இராணு
வத்தின் குண்டு வெடிக்க வைக்கும் பிரிவினர் இக் குண்டை வெடிக்கவைத்துள்ளனர்.

**கூட்டம்**

வலயம்- 1 இன் முதன்மை ஆசிரியர்களுக்கும் கோட்டங்களுக்கான திட்டமிடல் உத்தியோகத்தர்கள் மற்றும் உதவியாளர்ஆகியோரிற்கானகூட்டமொன்று நாளை காலை 9 மணிக்கு கல்வித்திணைக்கள முகாமைத்துவ பிரிவில் நடைபெறவுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

30-04-94 சனி காலை 9-00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்,

**சுவையருவி**

**லெப். கேணல் இராசன் தெரு,**

**(மின்நிலைய வீதி)**

**யாழ்ப்பாணம்.**

(சி-9277)

பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி. எம் ஜயரட்ண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காலி மாவட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கும் உள்ளூர் ஆட்சிமன்ற ஊழியர்களுக்கும், பயங்கரவாத கால கொடுப்பனவிற்கான முற்பணம் வழங்கப்படாது விட்டால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கூச்சல் போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது:

காலிமாவட்டத்தில் 31,000 அரசாங்க மற்றும் உள்ளூர் ஆட்சி மன்ற ஊழியர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு கொட கோரிக்கை விடுத்துள்ளார். இது சம்பந்தமான ஆவணம் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இன்னும் ஒருவார காலத்தில் இதற்கான அனுமதி வழங்கப்படாது விட்டால் கூச்சல் போராட்டம் நடாத்தப்படும் என்றும், இப்போராட்டம் தொடர்பாக சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் கட்சி, தேச விடுதலை முன்னணி போன்றவற்றுடனும் பேச்சு நடத்தப்பட்டிருப்பதாகவும் டி எம். ஜயரட்ணா மேலும் தெரிவித்தார்,

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**தோற்றம்**

< 20.2.44

29.07.74 >

**மறைவு**

15. 03. 94



திருமதி
**இந்திராணி பரந்தாமன்**

செல்வி
**கௌரி பரந்தாமன்**

15- 03- 94 அன்று சிறிலங்கா இராணுவத்தின் கொலைவெறி எறிகணைத் தாக்குதலில் எமை விட்டுப் பிரிந்த அன்பு மனைவி, தாயார் இந்திராணி பரந்தாமன் அவர்களுக்கும் மகள், சகோதரி கௌரி பரந்தாமன் அவர்களுக்கும் இந்நாளில் எம் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

28-04-94 இன்று எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

20, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(8150)

கணவன் [தந்தை]
பிள்ளைகள் [சகோதரர்]

**வலி கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி**

உணவகத்திற்கு பொருத்தமான சாப்பாட்டு மேசை, கதிரை தேவைப்படுகின்றது. அதனை ஒப்பந்த அடிப்படையில் செய்து தரக்கூடியவர்கள் நேரடியாக தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு கூறுவிலை விண்ணப்பங்களை பெற்று 07-05-94 நண்பகல் 12 மணிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

(சி-9279) - பொது முகாமையாளர்

**வலி கிழக்கு வட பகுதி**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**அச்சுவேலி**

## வேலை வாய்ப்பு

கூட்டுறவு பேக்கரியில் - பாண், பணிஸ், சகல விதமான பிஸ்கட் வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள தயாரிப்பாளர் தேவை. இவர் தலையாய தயாரிப்பாளராக இருப்பார் இத்தொழிற்பாடுகளில் வேலை செய்பவர்களை மேற்பார்வை செய்வதும் இவருடைய பொறுப்பாகும். நியாயமான சம்பளம் வழங்கப்படும் உங்களுடைய விபரங்களை குறிப்பிட்டு 6 5-94க்கு முன்பு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்,

[சி-9280] பொது முகாமையாளர்

கடைசி வரை உன் நினைவு அழியாது
காலமெல்லாம் உன் நாமம் மறையாது

உன் நினைவால் வாடும்

**திருமலை மக்களும்,**

(8152) **விளையாட்டுக்கழக நண்பர்களும்,**

## நினைவு கூருகின்றோம்...

## 1994-04-28

1987-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை - கந்தளாய்ப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**கப்டன் குட்டி / தினேஸ்** (முகமது அனிபா முகமது காசன் -திருமலை)

19988-ம் ஆண்டு மன்னார் - வெள்ளாங்குளம்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**மேஜர் நரேன்** (நல்லைநாதன் ஜனார்த்தன் - நாவலர் வீதி - யாழ்)

தேசவிரோதசக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளரான,

**ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை** [வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**மு. சிறிதரன்** (இராமநாதபுரம் - கிளிநொச்சி)

1991-ம் ஆண்டு கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்திருந்து யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். விசுவாசம்** [பொன்னுத்துரை சுதாகரன் -வவுனிக்குளம் - துணுக்காய்)

**லெப். ஆனந்தன்** (கிருஸ்ணராஜர சந்திரன் - திருவையாறு - கிளிநொச்சி)

**சுவித் | சுஜித்** (இராசரட்ணம் சிவசுப்பிரமணியம் - இரத்தினபுரம் - கிளிநொச்சி]

கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவம் குறிபார்த்துச் சுட்டதில் வீரச்சாவெய்திய,

**றெஜினோல்ட்** (பாலசிங்கம் கண்ணன் - புத்தூர் மேற்கு - யாழ்]

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9274)

# யுத்த நிறுத்தம் ஏற்படும் சூழலை அரசாங்கமே உருவாக்க வேண்டும்

**- காமினி நவரத்தினா**

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு அரசாங்கத்திற்கு விருப்பம் இருந்தால் அதற்கான சூழ்நிலையை அரசாங்கம் தான் ஏற்படுத்த வேண்டும் இவ்வாறு சற்றடே றிவியூ இதழின் ஆசிரியராக இருந்தவரும், பிரபல சிங்களப் பத்திரிகையாளருமான காமினி நவரத்தினா கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் 'யுக்திய' பத்திரிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிலை இப்போது அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இன்று கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் விடுதலைப் புலிகளுடனான பகைமை காரணமாக மட்டுமே அரசாங்கத்துடன் சேர்ந்துள்ளன. எனவே விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு மட்டுமே இப்போது அவசியமானது. விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து உள்ளனர் என்பது தவறானதாகும். அவர்கள் பலவீனமாக இருப்பின் இராணுவத்தால் ஏன் தாக்க முடியாமல் இருக்கின்றது இதிலிருந்து இராணுவம் தான் விடுதலைப் புலிகளைவிட பலவீனமாக இருப்பது தெரிகின்றது.

தற்போதைய புதிய தளபதி தாக்குதல்களுக்கு தலைமை ஏற்க முடியாது நான் தற்போது விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டும் என்பதையும், அதற்கான சூழ்நிலை ஏற்பட வேண்டுமாயின் இரு சாராரும் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதையும் எதிர்பார்க்கின்றேன். விமானக் குண்டு வீச்சினால் அப்பாவி மக்களே அதிகளவில் உயிரிழக்கின்றனர்.

இராணுவம் மிகவும் பலவீனமான நிலையில் இருப்பது வெளிப்படையாக உணரப்படுகிறது. தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் அரசுக்கு ஒரு பாடமாக இருக்கிறது. அண்மையில் ஜனாதிபதி விஜேதுங்காவை தனிப்பட்ட முறையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேன்; அவர் எனது வேண்டுகோளுக்கு விருப்பம் தெரிவித்தார். தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அரசியலில் ஒரு பூகம்பத்தையே ஏற்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்து நான் பேச்சுவார்த்தை நடத்தினேன். அவரும் வடக்கு, கிழக்கு யுத்தத்திற்கு அரசியல் தீர்வு காணப்படுவதையே விரும்புகின்றார் எனவும் தெரிவித்தார்.

## சமாதானத்தைக் கோரி அநுராதபுரத்திலிருந்து ஊர்வலம்

(கொழும்பு)

அநுராதபுரத்திலிருந்து கதிர்காமம் நோக்கி சமாதான ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 19ஆம் திகதி ஆரம்பமான இவ் ஊர்வலம் எதிர்வரும் மே 24ஆம் திகதி கதிர்காமத்தை அடையும் எனவும் 532 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இவ் ஊர்வலத்தில் இணைவோர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

நாட்டில் நடைபெறும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென்றும், மக்கள் சமாதானமான சூழலில் வாழ வழி செய்யப்பட வேண்டுமென்றும், இதற்கு அரசாங்கமே வழி செய்ய வேண்டுமென்றும் இச் சமாதான ஊர்வலத்தில் கலந்து கொள்வோர் வலியுறுத்தி வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## பேராத. பல்கலைக்கழகம் மீண்டும் மூடப்பட்டது

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகம் கடந்த வியாழக்கிழமையன்று முதல் மீண்டும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமையன்று நடைபெறவிருந்த சில பரீட்சைகளும் மாணவர்கள் சமுகமளிக்காததைத் தொடர்ந்து உருவான சூழ்நிலைகளின் விளைவாகவே மறு அறிவித்தல் வரை இப் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது.

இதேவேளை புதன்கிழமை நடந்த பரீட்சைக்கு சமுகமளித்த பொறியியல் பீடமாணவர் ஒருவரும், மருத்துவ பீட மாணவர் ஒருவரும் வேறு மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

## கொழும்பு - தூத்துக்குடி கப்பல்சேவைக்கு யோசனை

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் யாத்திரிகர்களுக்கான கப்பல் சேவையொன்றை நடத்துவது பற்றி இந்திய - இலங்கை அரசாங்க மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

அண்மையில் இலங்கை -இந்திய கூட்டுக் குழு கூட்டத்தின் போது சிறிலங்கா தூதுக்குழுவின் தலைவர் வெளியுறவு அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் இதற்கான யோசனையை வெளியிட்டார்.

இதனை இந்தியத் தரப்பும் ஏற்றுக் கொண்டதுடன் இது பற்றி மே மாத இறுதியில் மேலும் பேச்சுக்கள் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்திய நகரங்களுடனான ஏயர் லங்காவின் போக்குவரத்துத் தொடர்புகள் மேலும் விரிவாக்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

## சிரமதானம்

அண்மையில் வலிகாமம் கோட்டத்தில் வட்டுக்கோட்டை கிழக்கிலுள்ள அத்திராயன் வாய்க்கால் பாதை சிரமதான மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இச்சிரமதான நடவடிக்கையில் அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுவுடன் இணைந்து வட். கிழக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தினரும் ஊக்கத்துடன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுச்சர் அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலவச பாட நூல்களைக் கோட்டங்களில் இருந்து பெற்றதற்கான ஏற்றுக் கூலிக்குரிய வவுச்சரை வலயக் கல்விப்பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

## 20 லட்சம் ரூபா மருந்து யாழ். மாநகரசபைக்கு வரும்

(கொழும்பு)

யுனிசெப் நிறுவனத்தினர் இருபது லட்சம் ரூபா பெறுமதியான தரமான மருந்து வகைகளை யாழ்ப்பாணமாநகர சுகாதாரப்பிரிவிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இம் மருந்து வகைகள் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைவிட தண்ணீர் தாங்கி வாகனம், அம்புலன்ஸ் வாகனம், கழிவகற்றும் இயந்திரம் போன்றவையும் காலக்கிரமத்தில் யுனிசெப் நிறுவனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## இறுதிதொகுதி இலவசநூல் விரைவில் யாழ் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கான இவ்வருடத்திற்குரிய இலவசப் பாட நூல்களின் இறுதித் தொகுதி மிகவிரைவில் அனுப்பி வைக்கப்படும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளதாக யாழ் கல்விப்பணிமனை அறிவித்துள்ளது.

இப்பாடநூல்கள், இதுவரையும் இலவசபாடநூல்களைப் பெற்றுக்கொள்ளாத பாடசாலைகளுக்கும் மற்றும் விநியோகத்திற்கும் போதாமல் உள்ள பாடசாலைகளுக்கும் வழங்கவென தெரிய வருகின்றது. [பா]

## மருத்துவமனை கட்டடத்தில் முகாமிட படையினர் முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மகிழடித்தீவு வைத்தியசாலைக் கட்டடத்தில் அதிரடிப்படையினர் முகாம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் வெளியேறும் பகுதிகளில் நிலை கொள்ளும் அதிரடிப் படையினர் மட்டக்களப்பு வாவிக்கு மேற்கேயுள்ள படுவான்கரைப் பகுதியில் மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு சொந்தமான கட்டடங்களில் முகாம் அமைப்பதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளனர். இதனால் வைத்திய சேவைகள் முற்றாக சீர்குலைந்துள்ள இப் பகுதியில் வாழும் மக்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாக நேரும் எனக் கூறப்படுகிறது.

1990 ஜூன் மாதத்தின் பின்னர் செயற்படாதிருக்கும் மகிழடித்தீவு வைத்தியசாலையை வாரத்தில் மூன்று தினங்களுக்காவது திறப்பதற்கு மாவட்ட வைத்திய அதிபட்சகர் அண்மையில் நடவடிக்கை மேற்கொண்டிருந்த சூழலில் அதிரடிப்படையினரின் முயற்சி பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## தொண்டாமீது ஊழல்புகார் செல்லச்சாமி கூறுகின்றார்

கொட்டக்கலை தொழில் பயிற்சி நிலையத்திற்காக நோர்வே அரசு அன்பளிப்பாக வழங்கிய 3.9 மில்லியன் ரூபா பணத்தை அரசுக்கும் தெரியாமல் ஏப்பம் விட அமைச்சர் தொண்டமான் முயற்சித்தார் என்றும் இதனால் தான் அமைச்சருக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான உறவில் முறுகல் நிலை ஏற்பட்டது என்றும் அமைச்சரும் இ. தொ. கா. பொதுச்

டிக் கொண்டிருப்பதாகவும், படம் தயாரிப்பதற்கென்று கூறி சென்னைக்கு அனுப்பப்பட்ட சிலருக்கு பெரும் தொகைப்பணம் தொடர்ந்து செலவிடப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது போன்று தொண்டமானை சங்கடப்படுத்தும் 14 கேள்விகள் அடங்கியதுண்டுப் பிரசுரங்கள் அமைச்சர் செல்லச்சாமியின் வீட்டிலிருந்து விநியோகிக்கப்படுவதாகக்

## கடற்றொழிலாளர்களுக்கு விரைவில் அடையாள அட்டை

(நமது நிருபர்)

கடற்றொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

இதற்கென மாதிரி அடையாளஅட்டை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் ஏதும் தவறுகள்இருப்பின் அதனைத் திருத்துவதற்கெனவும்பரிசீலிப்பதற்குமாக ஐந்துபேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் விரிவாக்க அலுவலர், யாழ் பிரதேச செயலர், கூட், அதிகாரி, உதவி ஆணையாளர் தீவக ஒன்றிய செயலாளர், வலிதென் மேற்கு ஒன்றிய தலைவர் ஆகியோரே இப்பரிசீலனைக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

இவர்கள் மாதிரி அட்டையில் தவறுகள் இருப்பதாக சுட்டிக்காட்டும் பட்சத்தில் அவை திருத்தப்பட்டு அடையாள அட்டை தயாரிக்கப்பட்டு விரைவில் விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ச)

## தமிழ் அகதிகளில் 3000பேர் இந்தியாவிலிருந்து வருவர்

(மட்டக்களப்பு)

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ்அகதிகளில்சுமார் மூவாயிரம் பேர் மே மாத முதல்வாரத்தில் திருகோணமலைக்கு கப்பல் மூலம் கொண்டுவரப் படுவார்கள் என்று புனர்வாழ்வு புனர்அமைப்பு சமூகநலத்துறை அமைச்சர் பி. தயாரத்ன தெரிவித்தார்

மட்டக்களப்பில் அதிகாரிகள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், வடக்கு கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த இவ் அகதிகள் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கான ஒழுங்குகளை தமது அமைச்சுமேற்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## பூசா, வீரவில முகாம்களை மூடிவிடக் கோரிக்கை

(கொழும்பு)

தென் மாகாணத்திலுள்ள பூசா மற்றும் வீரவில தடுப்பு முகாம்களிலும் இருக்கும் இளைஞர்களுக்கு பொது மன்னிப்பில் விடுதலை வழங்கி அந்த இரு முகாம்களையும் மூடிவிட வேண்டும் என்று கோரும் பிரேரணையொன்று தென்மாகாண சபைக்கு வரவுள்ளது

அத்துடன்இம்மாகாணசபையில் கடந்த ஐ. தே க ஆட்சியின்போது இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் வீண்விரயங்கள்என்பவற்றை விசாரித்து குற்றம் இழைத்தோருக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்றும் அத்தகைய ஆணைக்குழுவில் பொது மக்களுக்கு சாட்சியமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்றும் பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றப்படவுள்ளது.

## இலவச சீருடை வழங்கல் யூன் 27இல் ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டப்பாடசாலை மாணவர்களுக்கு இலவசச் சீருடை எதிர்வரும் யூன் மாதம் 27 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

எனவே யாழ் மாவட்டத்தில் இது தொடர்பாக ஏற்பாட்டுக் குழுவை அமைத்து பொறுப்பாளர்கள் உரியவர்களிடம் வேலைகளை ஒப்படைத்து நிறைவு செய்யுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வலயக் கல்விப்பணிப்பாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

6வது ஆண்டு நினைவு அஞ்சலி

இடமாற்றம்

## 6ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



### மேஜர் நரேன்
(நல்லைநாதன் ஜெனார்த்தனன்)

தாயின் மடியில் 24.11.1963 — தாயக மண்ணில் 28.04.1988

ஆசைமுகம் மறைந்து ஆண்டு ஆறு போயும்
ஆறிடுமோ எம் மனம்
பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
புவியில் உன் சேவை புகழிடம் பெற்றதையா
தமிழீழ மண்ணில் தனியிடம் வகுத்தவனே
தாரணியில் உன் அடி பின்பற்ற
திரள்வோமய்யா அனைவரும்

218/9, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பின் அப்பா, அம்மா,
சகோதரர், மைத்துனர்,
மாமா, மாமி.

(8148)


...ரும் இ. தொ. கா. பொதுச் செயலாளருமான எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

அமைச்சர் செல்லச்சாமி தொண்டமான் குறித்து மேலும் எழுப்பியுள்ள சில கேள்விகளில், தொண்டமானின் சுயசரிதை எழுதுவதற்காக காங்கிரசின் பணம் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவிடப்பட்டதாகவும், காங்கிரசின் பணத்தில் 35 லட்சம் ரூபா முதல் 45 லட்சம்ரூபா வரையில் தொண்டமானின் குடும்பத்தினர் சுருட்...

...விநியோகிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது

...காட்டப்பட்டுள்ளது.

## மேதின ஏற்பாடுகளில் நிறுவனங்கள் தீவிரம்

தொழிலாளர் தினமான மேதினத்தை முன்னிட்டு அதனை எதிர்கொள்ள யாழ் குடாநாடெங்கும் தயாராகி வருகிறது.

அரச தனியார் மற்றும் பொதுஸ்தாபனங்களில் மேதினம் சம்பந்தமான முன்னேற்பாடுகளை மிகவும் துரித கதியில் மேற்கொண்டு வருகின்றனர்

மேற்படி துறையினர் தமது பகுதிகளுக்கு உட்பட்ட மேதினம் சம்பந்தமான முன்னாயத்தக் கூட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக வீதிகளில் சிவப்பு, மஞ்சள், பதாதைகள், தோரணங்கள் பறக்க விடப்பட்டுள்ளன அத்துடன் வாகனங்களில் தொழிலாளர்களைத்திரட்டுமுகமாக பதாதைகள் கட்டப்பட்டுள்ளன அத்துடன் வாகன ஊர்திகளுக்கான ஏற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அத்துடன் யாழ் மாநகர சபை தனது நான்கு தொழிற் சங்கங்களையும் ஊழியர்களையும் இணைத்து மேதினத்தை முன்னிட்டு வாகன ஊர்தி ஒன்றையும் மற்றும் ஏற்பாடுகளையும் மிகத்தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது

கொழும்பில் இம்முறை

## ஐந்து இடங்களில் மட்டும் மேதினப்பொதுக்கூட்டங்கள்

(கொழும்பு)

உலகத் தொழிலாளர் தினமான மேநாளை முன்னிட்டு இம்முறை கொழும்பில் ஐந்து பொதுக்கூட்டங்களும், இரண்டு ஊர்வலங்களும் நடாத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் திருமதி சிறிமாவோ தலைமையில் கெம்பல் மைதானத்திலும், நவசமசமாஜக் கட்சியின் கூட்டம் வாசுதேவ நாணயக்கார தலைமையில் கொம்பனி வீதி டி. மெல் மைதானத்திலும், சிறிலங்கா மக்கள் கட்சியின் மேதினக் கூட்டம் ஓஸி அபய குணசேகர தலைமையில் ஹவ்லொக் மைதானத்திலும், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் மேதினக் கூட்டம் கொம்பனி வீதி நியூனம் சதுக்கத்திலும், இலங்கை கல்கறு சங்கத்தின் மேதினக் கூட்டம் புறக்கோட்டை சந்தியில், ஏ. ஈ. குணசிங்க சிலைக்கு அண்மையிலும் நடைபெறவுள்ளது. இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஊர்வலங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

இதுதவிர மலையக மக்கள் முன்னணி கொட்டகல மைதானத்திலும், இ தொ. கா. நுவரெலியாவிலும் பொதுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை ஊர்வலம் மற்றும் கூட்டங்கள் எதையும் நடத்துவதில்லையென்றும், மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவை நினைவு கூருவதென்றும் முடிவு செய்துள்ளது.

## எழுதுநர், தட்டெழுத்தாளர் தேவைஇன்னும் இருக்கிறது

### கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயம் - 1 கல்விப் பணிமனையில் தற்சமயம் எழுதுவினைஞர்கள் மற்றும் தட்டெழுத்தாளர் ஆகியவற்றிற்கான தேவை உள்ளதாக அதன் கல்விப்பணிப் பாளர் செல்வி பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ் வெற்றிடங்களை நிரப்பித்தருமாறு யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகரை தாம் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

தற்சமயம் யாழ் வலயம் -1 கல்வித்திணைக்களத்தில் தேசிய தொழில் பயிலுநர் சபையினால் வழங்கப்பட்ட விரல்விட்டு எண்ணக் கூடிய தொகை பயிற்சியாளர்களே அங்கு கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)


## இடமாற்றம்

எமது ஸ்தாபனம் சில காலம் 138, மானிப்பாய் வீதியில் இயங்கி வந்தது மீண்டும் 25.04.94 தொடக்கம் பழைய இடத்துக்கு (சுகபாணிகளஞ்சியம் இல. 214, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்) மாற்றப்பட்டுள்ளது என்பதை எமது அன்பிற்குரிய வாடிக்கையாளர் ஆதரவாளர் நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எம்மிடம் பிறிமா கோழித்தீனி, மாட்டுத்தீனி, தவிடு, பிண்ணாக்கு, செத்தல் மிளகாய், எள்ளு உழுந்து, பயறு, நிலக்கடலை மற்றும் பொருள்களும் நிதான விலையில் விற்கப்படும். அத்துடன் பிறிமா கோழிக்குஞ்சுகள் (பேட்டுக்குஞ்சுகள் லேமன் புறோயிலர் குஞ்சுகள்) விற்கப்படும் தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்புகொண்டு விலையையும் விபரங்களையும் அறியலாம்.

**சுகபாணி களஞ்சியம்**
**இல. 214, மருத்துவமனை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

கோழி வளர்த்துப் பயன் பெறுங்கள்.
கோழிக்குஞ்சுகள் பராமரிக்கப்படும் இடம்

இல. 54, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி-9269)



## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)

நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள் "ஹொண்டா" C 50, C 90 அல்லது M. D 90 ஒன்றினை விற்பனைக்காக வைத்திருப்போர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்

தலைவர்
சங்கானை ப.நோ.கூ. சங்கம்
சங்கானை

26-04-94 (சி-9268)

கோப்பாய் வெள்ளெருவை பிள்ளையார்

## சங்காபிஷேகம்

இன்று 9 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெற்று 5 மணியளவில் திருவூஞ்சல் பாடி, 6—7 மணிவரை கம்பன் கழகப் பேச்சாளர் திரு. ஆறுதிருமுருகன் ''விநாயகர் மகத்துவம்'' பற்றி சொற்பொழிவாற்றி, எம் பெருமான் பூந்தண்டிகையில் வீதிவலம் வருவார்.

(8140) — உபயகாரர்

## LONDON EXAMS

NOV | DEC 94

| | | COURSE FEES |
|---|---|---|
| C. I. M. A. | (Stage - I) | 2,500/- |
| I. A. B. | (Foundation) | 600/- |
| I. A. B. | (Intermediate) | 700/- |
| I. A. B. | (Final) | 800/- |

ஃ விரிவுரையாளர்கள்

சத்தியதாஸ், இளம்பூர்ணன்,
சிவபாதசுந்தரம், கேசவன்

ஆரம்பம்: 30-04-1994

COMPUTER BASIC, LOTUS 1--2--3
SHORT HAND & TYPING வகுப்புகள்
நடைபெறுகின்றன.

ஃ குறைந்த கட்டணம்
ஃ சிறந்த பெறுபேறுகள்

உறுதியான கல்வியைப் பெற

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd CROSS STREET,
JAFFNA.

(சி-9267)

## கலை வர்த்தகக் கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

கலை - வர்த்தகம்

G. C. E. A/L 96

புதிய பிரிவு

எமது வலுவையான ஆசிரியர் குழு


# வடக்கு-கிழக்கு மக்களின் பெயரில் கொழும்பிலுள்ளவர்கள் நிதி மோசடி

(மட்டக்களப்பு)

கொழும்பிலுள்ள செல்வாக்கு மிக்க தமிழர்கள் சிலரும் சிங்களவர் சிலரும் இணைந்து தமக்கிடையே சில அமைப்புக்களை ஏற்படுத்தி வடக்கு கிழக்கு நிலைமையைக் காரணம் காட்டி வெளிநாடுகளிலிருந்து பணத்தினைப் பெற்று தமது சுய தேவைகளுக்காக பயன்படுத்துவதாக தெரியவருகின்றது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களின் நிலையைக் காட்டி புனர்வாழ்வு மற்றும் நிவாரணம் போன்ற பணிகளில் ஈடுபடுவதாகக் கூறி, இப்பகுதியில் நிலவும் சூழலைப் பற்றி எடுத்துரைத்து பெறப்படும் பெருமளவு பணத்தில் சிறிதளவு கூட உண்மையில் சம்பந்தப்பட்டவர்களால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் பயன்படுத்தப்படுவதில்லை. அண்மையில் மட்டக்களப்பிற்கு விஜயம்செய்த அவுஸ்திரேலிய தூதுவராலய அதிகாரி ஒருவர் இதுபற்றி வெளிப்படையாகக்கூறி தமது மன வேதனையை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு பகுதியில் செயற்படும் சர்வதேச தொண்டர் அமைப்புகள் சில உள்ளூர் தலைமையை கொண்டுள்ள தொண்டர் அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இராணுவ உதவியுடன் முட்டுக்கட்டை போட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. அரசாங்கத்தின் உதவியோடு உள்ளூர் தலைமையைக்கொண்டுள்ள சிறிய தொண்டர் அமைப்புகளின் சேவைகளை கட்டுப்படுத்தும் இத்தகைய அமைப்புகளின் செயற்பாடு குறித்து மக்கள் விசனம் அடைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

## இனரீதியான போராட்டமே முன்னிலை வகிக்கின்றது

### டா. அன்ரனி நினைவுக் கூட்டத்தில் தெரிவிப்பு

(குருநகர்)

''உலகளாவிய விதத்தில் நடக்கின்ற போராட்டங்கள் இனரீதியாகத்தான் நடந்துள்ளன நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன; வர்க்க ரீதியாக அல்ல''

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்ற டானியல் அன்ரனி நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து உரையாற்றிய பிரபல எழுத்தாளரும், யாழ் உதவி அரச அதிபருமான திரு. க. குணராசா (செங்கை ஆழியான்) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கவிஞர் தில்லைச்சிவன் தலைமையில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தின்போது டானியல் அன்ரனியின் திருவுருவப் படத்தை பிரபல பழம்பெரும் எழுத்தாளர் திரு வரதர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

எழுத்தாளர் செங்கை ஆழியான் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

''இந்த உலகத்தை வர்க்க பேதமற்ற உலகாக மாற்ற டானியல் அன்ரனி கனவு கண்டார். ஆனால் அதற்கு மாறாக உலகம் வர்க்க ரீதியில் அல்ல இன ரீதியில் அணிதிரண்டு போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பது கண்கூடு'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வரவேற்புரையில் திரு. டொமினிக் ஜீவா:

''இளைய தலைமுறை எழுத்தாளர்களில் நல்லவீச்சுள்ள சமூகப் பார்வையுடன் படைப்புக்களைத் தந்தவர் டானியல் அன்ரனி அவருடைய இழப்பு மிகவும் கெதியாக நிகழ்ந்துவிட்டது என்றார்.

திரு சு. டிவகலாலா, திரு. க. தணிகாசலம், திரு ச. சி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் நினைவுரை நிகழ்த்தினர்.

திரு. ஐயா சச்சிதானந்தன் நன்றி கூறினார். (51)

## வலைபந்தாட்ட முடிவுகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை கோட்டத்தில் நடைபெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை பெண்கள் உயர்கல்லூரி 15, 17, 19 வயதுப் பிரிவு போட்டிகளில் முதலாமிடங்களைப் பெற்று வெற்றியீட்டியது. வட இந்து மகளிர் கல்லூரி இம்மூன்று பிரிவுகளிலும் இரண்டாம் இடங்களைப் பெற்றது.

பருத்தித்துறை பெண்கள் உயர்கல்லூரி ஆடுகளத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியில் பருத்தித்துறை பிரதேசசெயலரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு. ஆ. சிவசாமி பிரதமவிருந்தினராக கலந்து கொண்டார்.

இப்போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற இரண்டு அணிகளும் வலய மட்டத்தில் போட்டியிட தெரிவு செய்யப்பட்டுள்ளன. (யோ)

## உயர்தர வகுப்புக்கான துரித மீட்டல் பயிற்சி

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி ஆய்வுக்குழுவினரால் 1994-ம் ஆண்டு உயர்தர வகுப்புக்கான கலை, வர்த்தகம் பாடங்களுக்கு துரித மீட்டல் பரீட்சை வகுப்புக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை பின்வரும் அட்டவணையின் பிரகாரம் நடாத்தப்படவுள்ளது.

வல்வை மகளிர் கல்லூரி பரீட்சை நிலையத்தில்வல்வை சிதம்பராக் கல்லூரி, உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வல்வை மகளிர் கல்லூரி பரீட்சார்த்திகளும், வேலாயுதம் மகா வித்தியாலய பரீட்சை நிலையத்தில், ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலய பரீட்சார்த்திகளும், வட இந்து மகளிர்கல்லூரிபரீட்சை நிலையத்தில், வடஇந்து மகளிர்கல்லூரி, மெதடிஸ்தபெண்கள் கல்லூரி பரீட்சார்த்திகளும், விக்னேஸ்வராக்கல்லூரி பரீட்சைநிலையத்தில் ஞானசாரியார்கல்லூரி, நெல்லியடி ம.ம வித்தியாலயம், விக்னேஸ்வராக்கல்லூரி பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத்தோற்ற முடியும்.

மேற்படி நிலையங்களில் நேர அட்டவணையையும், பாடத்திட்டங்களையும் மாணவர்கள் பெற்று பரீட்சைக்குத் தோற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (யோ)

## முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. சுத. கட்சியில் சேரலாம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினரான ஹிஸ்புல்லா விரைவில் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொள்ளலாம் என்றுகூறப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரசின் தலைமைக்கும் இவருக்கும் இடையிலான உறவுகள் விரிசலடைந்து வருவதாகவும், சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்வதற்கான பேச்சுக்களில்இவர் ஈடுபட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

### வவுனியா - கொழும்பு ரயிலில்

## ரயில் நிலைய அதிபருக்கு துப்பாக்கி காட்டி மிரட்டல்

மதவாச்சி புகையிரத நிலைய அதிபர் நெல்சன் அண்மையில் வித்தியாசமான அனுபவமொன்றை சந்தித்துள் ... யில் ஆயுதபாணி ஒருவர் பயணம் செய்தார். அந்த ஆயுதபாணி புகையிரத நிலைய அதிபர் தமது இருக்கையைப்

## தொண்டமான் சிங்கப்பூர் பயணம்?

(கொழும்பு)

உல்லாசப் பயணிகளின் வருகையை ஊக்குவிக்கும்முகமாக உல்லாசப் பயணத்துறை மற்றும் கிராமிய கைத்தொழில்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்யவுள்ளார். அமைச்சருடன் அமைச்சின் மூத்த அதிகாரிகள் சிலரும் இந்தப் பயணத்தில் கலந்து கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது

## வைத்திய கலசம் வெளியிடப்பட்டது

(பருத்தித்துறை)

வைத்திய கலாநிதி மு. க. முருகானந்தனின் ''வைத்திய கலசம்'' நூல் வெளியீட்டு விழா வட- இந்து மகளிர் கல்லூரியில் எழுத்தாளர் திரு. தெணியான் தலைமையில் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. விபுலன் வாழ்த்துரை வழங்கினார் திரு து. குலசிங்கம் வெளியீட்டுரையை நிகழ்த்தினார் நூலாசிரியர் வைத்தியகலாநிதி முருகானந்தனிடமிருந்து அவரது பெற்றோர் திரு. திருமதி மு. கதிரவேற்பிள்ளை ஆகியோர்வைத்தியகலசம் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டனர் பிராந்திய பல்வைத்திய நிபுணர் செல்வி உமா சிவபாதசுந்தரம் கரவெட்டி ஞானசாரியர் கல்லூரி ஆசிரியர் திரு ஆ. கந்தையா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர் நூலாசிரியர் வைத்திய கலாநிதி முருகானந்தனின் உரையையடுத்து திரு கி. சிவனேசன் நன்றியுரை வழங்கினார்.

## சீநோர் நிறுவனத்தை இயங்க வைக்க முயற்சி

(நமது நிருபர்)

யாழ் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக மூடப்பட்டுக்கிடக்கும் சீநோர் நிறுவனம் மீண்டும் இயங்கவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

காரைநகரில் இயங்கி வந்த இந்நிறுவனம் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து மூடப்பட்டது தெரிந்ததே.

இதனை மீள இயங்க வைப்பதற்கானமுயற்சியில்கொழும்பில் உள்ள தலைமை அலுவலகம் ஈடுபட்டு வருகின்றது. இது அதன் பொது முகாமையாளரிடம் சீநோர் பற்றிய பூரண அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி கோரியுள்ளது. இதற்கிணங்க பூரண அறிக்கையுடன் முகாமையாளர் கொழும்பு சென்றுள்ளார்.

(ச, சி)

### பரீட்சைக்கு தோற்றாத

## பட்டதாரிகளுக்கும் நிரந்தர ஆசிரியர் நியமனம்

(நல்லூர்)

நிரந்தரமாக்குவதற்கான ... ங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச் சேவைகளை

எமது வலுமையான ஆசிரியர் குழு

**ஆரம்பம் :- 30.04.94**

சனிக்கிழமை காலை 8.00 மணி

குறிப்பு:- மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் இன்றுமுதல் பதிவு செய்து இடத்தை உறுதி செய்து கொள்ளுங்கள்.

(சி-9275) - நிர்வாகி


மையில் வித்தியாசமான அனுபவமொன்றை சந்தித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற புகையிரத நிலைய அதிபர்கள் சங்கக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இரண்டாம் வகுப்பு உறங்கல் இருக்கை ஆசனம் ஒன்றைப் பதிவு செய்திருந்தார். புகையிரதம் மதவாச்சிக்கு வந்தபோது இவரது இருக்கைக்கு அருகாமை பாணி புகையிரத நிலைய அதிபர் தமது இருக்கையைப் பயன்படுத்துவதற்கு அனுமதி மறுத்தார். நீண்ட நேரம் நடைபெற்ற விவாதத்திற்குப் பின்னர், நீ ஒரு சிங்களவன் என்றபடியால் இருக்க அனுமதிக்கிறேன். ஆனால் நான் இறங்கிப் போகும் வரை இங்கிருந்து விலகிச் செல்லக் கூடாது. மீறி கதவைத் திறந்து வெளியேறினால் இவை தான் உன்னிடம் பேசும்என்று துப்பாக்கியையும், கைக்குண்டையும் காட்டி மிரட்டினாராம்.

புகையிரத நிலைய அதிபரும் வேறு வழியின்றி அவரது நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு பயணம் மேற்கொண்டதால் இயற்கைக்கடன் கழிக்கக் கூட செல்ல முடியவில்லை என்று அவரே சங்கக் கூட்டத்தில் கவலையுடன் தெரிவித்தார்.

யடுத்து திரு கி. சிவனேசன் நன்றியுரை வழங்கினார்.

(25)(யோ)

## உருவப்படம் திறந்து வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் மறைந்த மூதறிஞர் க. சி குலரத்தினம் அவர்களின் நினைவாக யாழ் மாநகர சபை நூலகத்தில் அவரது உருவப்படம் திறந்து வைக்கப்படவுள்ளது

இந்நிகழ்வு மிகவிரைவில் யாழ். மாநகர சபையினால் சிறிய ஒரு வைபவமாக நடத்தப்படவுள்ளது.

இவர் சிறிலங்கா படைகளினால் அழிக்கப்பட்ட எமது கலைப் பொக்கிசமாகிய யாழ். பொது நூலகத்தின் தோற்றத்திற்கு வழி கோலியவர் என தெரிவிக்கப்பட்டது.

(பா)

(நல்லூர்)

நிரந்தரமாக்குவதற்கான பரீட்சைக்குத் தோற்றாத பட்டதாரி பயிலுனர் உதவி ஆசிரியர்களும் நிரந்தரமாக்கப்படவுள்ளார்கள்

1990 ஜூன் முதலாம் திகதிக்கு முன் பட்டதாரி பயிலுனர் உதவி ஆசிரியராக நியமனம் பெற்றவர்களுக்கு 1992-8-15 இல் நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை நடைபெற்றது. அந்தப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கு நியமனம் வழங்கும்படி அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச் சேவைகளை அனைத்து கல்விப்பணிப்பாளர்களையும் பணித்துள்ளது.

பட்டதாரி பயிலுனர் உதவி ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தோற்றாதிருப்பின் அவர்கள் மூன்று வருடச் சேவையைப் பூர்த்தி செய்திருந்தால், 93/9 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின் படி நிரந்தரபட்டதாரி சேவையாளர் பட்டியலில் சேர்க்கும்படி கல்விச் சேவைச் சபை பணித்துள்ளது

## தொண்டர் ஆசிரியராக இருந்து நியமனம் பெறாதவர் விபரம் திரட்ட நடவடிக்கை

(நல்லூர்)

பாடசாலைகளில் 1989 பெப்ரவரி முதலாம் திகதி முதல் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு இதுவரை நியமனம் கிடைக்காதிருந்தால், அவர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் மேற்குறிப்பிட்ட தொண்டர் ஆசிரியர் விபரங்களை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் வலயம் ஒன்று பணிப்பாளரால் கேட்கப்பட்டுள்ளார்கள். கல்வித் தகைமை, கடமையாற்றிய காலம், கற்பித்த பாடநெறி ஆகிய விபரங்களே கோரப்பட்டுள்ளன.


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரானலி வீதி, யாழ்ப்பாணம்.

96

கலை, வர்த்தகம்

அடுத்த புதிய பிரிவு ஆரம்பம்

30 - 04 - 94

காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல்<br>திரு. கலாகரன் | கணக்கியல்<br>திரு. S.K. பிரபாகரன் | வர்த்தகம்<br>திரு. தேவா |
| அளவையியல்<br>திரு. விக்கி | தமிழ்<br>திரு. குழந்தை | இந்து / நாகரிகம் / சமயம்<br>திரு. காரை சுந்தரம் பிள்ளை |
| புவியியல்<br>திரு. குணராசா | அரசியல்<br>திரு. சிலன் | வரலாறு<br>திரு சிறிதரன் |

இதுவே இறுதி பிரிவாகும்

அனுமதிகள் இன்று முதல் பெற்றுக்கொள்ளவும்

(சி-9270)


## நன்னீர் மீன்கள் வளர்க்க கெயர் ஸ்தாபனம் முயற்சி

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து குளங்களில் நன்னீர் மீன்களை வளர்க்கும் முயற்சியில் அகில உலக கெயர் ஸ்தாபனம் ஈடுபட்டுள்ளது.

இதன் முதற் கட்ட பரீட்சார்த்த திட்டம் அமுல்படுத்த அம்பன்குளம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது இக்குளத்தை புனரமைக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப் படுவதாகவும் இக் குளத்தில் மூன்று அடிக்கு சேறு காணப் படுவதாகவும் இவற்றை அகற்றும் முயற்சிகள் நடைபெறுவதாகவும் தெரியவந்துள்ளது.

இவற்றைத் தேவைக்கேற்ப மாற்றி அமைப்பதற்கு 50 வரையான தொழிலாளர்களும் நீர் இறைக்கும் இயந்திரங்களும் தேவை படுவதாகவும் இவற்றை பெறும் முயற்சிகள் நடைபெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கடற்தொழில் பயிற்சி பாடசாலையை மூட முயற்சி

யாழ். மாவட்டத்தில்உள்ள கடற்தொழில் பயிற்சிப்பாடசாலை விரைவில் மூடப்பட இருப்பதாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பயிற்சிப்பாடசாலையை மூடும் முயற்சியில் சிறிலங்கா அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ள போதிலும் இதனை மூடும் அரசின் திட்டத்தை வன்மையாக எதிர்க்கப்போவதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மாவட்ட கடல்வள அபிவிருத்திக் கூட்டத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

(ச, சி)

## புதிய குடியிருப்பு அமைக்க புனர்வாழ்வுகழகம் ஈடுபாடு

(தென்மராட்சி)

இடம் பெயர்ந்து பண்டிதர் குடியிருப்பு அகதி முகாம்களில் தங்கி இருப்பவர்களுக்கு சுகாதார வசதியின்மையைக் கருத்திற் கொண்டு புதிய இடங்களில் புதிதாக குடிசைகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் தமிழீழபுனர்வாழ்வுக் கழகம் (T.R.O) ஈடுபட்டு வருகின்றது.

மேற்படி பகுதியில் புதிதாக 100 குடிசைகளையும், 60மலசல கூடங்களையும், 5 குழாய்க் கிணறுகளையும் அமைத்துவருகின்றனர். மலசலகூடங்கள் சுண்ணாம்பு சீமெந்துகளினால் கட்டப்பட்டு வருகின்றன. அப்பகுதியில் நெருக்கமாக வாழ்வது குறிப்பிடத்தக்கது தற்போது ஒரு குடும்பத்திற்கு 2 பரப்புக்காணி வீதம் வழங்கப்படவுள்ளது. இத்துடன் புதிய பாலர் பாடசாலைகள் மூன்றும் போசாக்கு புனர்வாழ்வுக்கழக நிலையம் ஒன்றும் புதிதாக புனரமைக்கப் பட்டுள்ளது. இதற்கான சகல வேலைகளையும் (T.R.O) செய்து வருகின்றது. இதற்கு சிரமதான மூலம் போராளிகள் வேலைகளை செய்து வருகின்றனர்.

(86)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

*பாலாடை கொடுத்து திணறடித்தும் கூட பூனையைக் கொல்லக் கூடும்.*

*- சார்லீஸ் கிங்ஸ்லி*


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-04-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் - 05


## சுதந்திரக் கட்சி எதுவரை செல்லும்?

"இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியோ பிரதான எதிர்க்கட்சிகளோ ஏற்றுக் கொள்ளப்போவதில்லை" என சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீத் இந்தியாவிடம் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா - இந்தியா கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு கூட்டத்திற்கு டில்லி சென்ற சமயம் இதனைத் தெரிவித்த அமைச்சர் ஹமீத், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத் தொடர்களில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் மிக நுணுக்கமாக ஆராய்ந்ததன் பின் வெளியிடப்படும் தகவல் இதுவெனவும் அதனை ஆதாரப்படுத்த முனைந்துள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைப்பென்பது இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் முக்கியமானதொரு தவிர்க்க முடியாத அம்சம். 1987ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட சிறிலங்கா - இந்தியா சமாதான உடன்பாட்டில் கூட தற்காலிகமாகவேனும் இம்மாகாணங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற நிலையிலேயே சமாதான உடன்பாடு ஒன்று செய்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் மேலும் நான்கு ஆண்டுப்போரின் பின்னரும் வடக்கு - கிழக்கை இணைப்பதற்கு ஆளும் கட்சி தயாராக இல்லை என்பது இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுகாண அரசாங்கம் தயாராக இல்லை என்பதன் வெளிப்பாடாகவே கொள்ள முடியும். அதே வேளை எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு எதிராகவே உள்ளது என ஹமீத் தெரிவித்துள்ளமையும் இன்றைய அரசியற் சூழ்நிலையில் ஆழ்ந்து கவனிக்க வேண்டியதாகும்.

ஐ.தே.க. மட்டுமல்ல சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ...

# மண்ணை வளம் படுத்துவதற்கு கூட்டெரு சிறந்த சாதனம்

மண் ஏனைய பிலங்கினங்களைப்போல் உயிருடன் வாழும் தன்மையுள்ளது. இது கனிப்பொருள்கள், சேதனப் பொருள்கள், நீர், காற்று, என்பவற்றின் சேர்க்கையால் ஆனது. இச்சேர்க்கையின் தன்மையினால் இது ஓர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை போன்றுள்ளது. அதன் வேலைகள் சரிவர நடக்க வேண்டும் எனில் அதற்கு உணவூட்டல் முக்கியமானதொன்றாகும். இதற்காக வளமாக்கிகளை நாம் பயன்படுத்துகின்றோம். இத்தொழிற்சாலையான மண்ணிற்கு இருவகைப்பட்ட வளமாக்கிகள் பாவிக்கப்படலாம்.

1. அசேதன வளமாக்கி
2. சேதன வளமாக்கி

நாம் எமது விவசாய நடவடிக்கைகளில் அசேதன வளமாக்கிகளை மட்டுமே பயன்படுத்திவருகின்றோம். எனினும் ஆரம்பத்தில் இருந்த சேதன வளமாக்கியானது உற்பத்தி விளைவுடன் வெளியேற்றப்படுவதனால் அம்மண்ணில் சேதனவளமாக்கியின் சேமிப்பு குறைந்தவண்ணம்சென்று ஒரு நிலையில் சேதனப் பொருள் அற்ற மண்ணாக மாறுகின்றது. இந்நிலையில் அத்தொழிற்சாலையில் விளைவு குறைந்து விடும். எனவே தொழிற்சாலை சரியான உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் எனில் மேற்கூறப்பட்ட மண்ணின் நான்கு பகுதிகளும் இருத்தல் வேண்டும். எனவே இதில் இருந்து சேதனப் பொருள்களின் முக்கியத்துவம் தெளிவாக்கப்படுகின்றது, எனவே மண் என்னும் தொழிற்சாலைக்கு உணவூட்டும்போது சேதன அசேதன உணவு இரண்டினையும் ஊட்டுதல் இன்றியமையாததாகும்.

மேலும் நாம் சேதனப் பசளையாக கூட்டெருவும், மாட்டெருவும் பயன்படுத்துகின்றோம் ஆனால் இவற்றில் பயிர் போசணைகள் அனைத்தும் இருந்தாலும்கூட எமது அவசரத்திற்கு ஏற்ப அவை உடனடிப் பசளை கொடுப்பதில்லை இதன்காரணமாக 566 அந்தர் இரசாயனப் பசளை பாவிக்கும்இடத்தில் 10 தொன் கூட்டுப் பசளை இட்டால்தான் சமமான பயனை எதிர்பார்க்க ...

எனவே ஒரு கமத்தில் பல வகையான கழிவுப் பொருள்கள் ஏராளமாய் உண்டு. அவற்றில் பெரும்பாலானவையே மேற்கூறப்பட்டது போல் நைதரசன் குறைவாகவே உள்ளன ஆகையால் அவற்றை அந்நிலையில் இடும் போது நிலத்தில் அவை பிரிகை அடைவதில் பங்கு பற்றும் நுண்ணுயிர்களின் தேவைக்குப் போதுமான நைதரசன் இருக்கமாட்டாது. ஆகவே நுண்ணுயிர்கள் மண்ணிலிருந்து நைதரசனைத் தமது தேவைக்குப் பயன்படுத்த அங்கு நாட்டப்பட்ட பயிர் பெரிதும் பாதிக்கப்படும். எனவே இதனை கூட்டெரு தயாரித்தல் மூலம் தீர்க்க முடியும்

எனவே கூட்டெரு தயாரித்தல் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்க்கலாம். அத்துடன் இங்கு நுண்ணங்கித்தாக்கம் கூடுவதனால் அங்கு உருவாகும் வெப்பத்தினால் களை விதைகள் முற்றாக அழிக்கப்படுகின்றன அத்துடன் இவை மென்மையாக்கப்பட்டு இலகுவில் பயன்படுத்தக் கூடிய நிலைக்கு மாற்றப்படுகின்றன இத்தகைய தன்மை கொண்ட கூட்டெரு தயாரித்தல் இன்றியமையாததொன்றாகும். இக்கழிவுகளை பயிர் செய்யாத நிலையில் உள்ள போதும் பாவித்தாலும் கூட அம்மண்ணில் ஈரலிப்புத் தன்மை இல்லையெனில் அது பிரிகைக்குட்படமாட்டாது எனவே இவையனைத்துக்கும் கூட்டெரு சிறந்த முறை கூட்டெரு தயாரிப்பானது மூன்று முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. குழிமுறை
2. குவியல் முறை
3, பெட்டி முறை

தொழிற்பாட்டை நன்கு செய்யவும் சீவிக்கவும் உதவும். இருந்தும் மாட்டுச்சாணி கிடைக்க தவிடத்து காட்டுச் சூரியகாந்தி, சீமைக்கிலுவை, சணல் இப்பில் இப்பில் முதலியவையின் பச்சை இலைகளின் மூலம் கூட்டெருத் தயாரிக்கலாம். இப்பச்சையிலைகள் போதிய போசாக்குணவுகளை நுண்ணுயிர்பிராணிகளுக்குக் கொடுத்து பொருட்களை உக்க வைக்கிறது. உண்மையாக கூடிய விரைவில் உக்க வைக்க வேண்டுமானால் மரச்சாம்பலும் சொற்ப மண்ணும் சேர்த்தல் வேண்டும். இவ்வண்ணம் செய்யப்பட்ட கூட்டெருவிற்கு நீர் ஊற்றுவது அவசியமாகும். நீரைக் கூடுதலாக ஊற்றுவதை தவிர்த்தல் வேண்டும்.

இப்படியாக தட்டுக்களை அடுக்கும் முறையும் கரைசல் ஊற்றும்முறைகளும் தொடர்ச்சியாக 2 | 12 அடி உயரம் வரை செய்தல் வேண்டும். நிரப்பும் வேலை ஒரு வாரத்தில் முடிவடைதல் நன்று. குவியல்களுக்கு தேவைக்கேற்ப நீர் ஊற்றி வருவதனால் அவற்றை ஈரலிப்பாக வைத்திருக்கலாம். ஆனால் கூடுதலாக நனைப்பதைத் தவிர்க்கவும். அடுத்த நடைமுறையாக பிரட்டுதல் வேண்டும். இந்த முறையில் மேல் தட்டுக்களை கீழும், கீழ்ப்பகுதிகளை மேலுமாக பிரட்டுதல் வேண்டும். ஒழுங்கான பிரட்டல் மூலம் காற்றோட்டத்தை அதிகரித்து நுண்ணிய உயிர்ச்சக்திகள் தங்கள் வேலைகளை அதாவது உக்க வைக்கும் முறைகளைச் சரிவரச் செய்ய முடிவதுடன் நல்ல ...

### கூட்டெருவிற்கு உபயோகிக்கப்படும் பொருள்கள்

| பொருள்கள் | நைதரசன் அளவுவீதம் நிறை அடிப்படையில் | உவர் காபன் நைதரசன் விகிதாசாரம் |
|---|---|---|
| சிறுநீர் | 15-18 | 0 8 |
| உலர்ந்தகுருதி | 10-14 | 3 |
| குரைகெம்பு எரு | 12 | 7 |
| மனிதகழிவு | 5.5 - 6.5 | 8 |
| புல் | 4 | 20 |
| எலும்புக்கழிவு | 4 | 8 |
| மதுபானத் தொழிற்சாலைக் கழிவு | 8.5 | 15 |
| பண்ணையுரம் | 2.2 | 14 |
| நீர்த்தாமரை | 2 2 | 20 |
| அவரைக் கழிவுகள் | 0.7 | 70 |
| கோதுமை வைக்கோல் | 0 6 | 80 |
| தென்னங்கோது கழிவு | 0 5 | 800 |
| உதிரும் இலைகள் | 0.4 | 45 |

கிருமிகளும் அழிந்து போகும். அத்தோடு சழிவுப் பொருட்கள் பிரிகையடைவதும் தூண்டப்படும். போதியளவில் ஈரமும் வெப்பமும் இருக்கின்றன வென்பதை இடையிடையே திடப்படுத்தி கொள்ள வேண்டும் ஓர் இரும்புக்கம்பியை குவியலுக்குள் செருகிச் சிலநிமிடங்களின்பின் எடுக்கும்போது அது சற்று சூடேறி ஈரக்கசிவு படிந்துமிருககும். சூடேறாவிடின் சாணியை மேலும் இட்டு குவியலைக் கிளறி திரும்பவும் அமைக்க வேண்டும், ஒரு மாதம் வரை கழிந்ததும் குவியல் நன்கு கிளறி வெளிப்பாகமிருந்து கழிவுப் பொருட்கள் உள்ளே செல்லும் வகை புரட்ட வேண்டும். அதன்பின் மூன்று வாரங்களுக்கொருமுறைபுரட்ட வேண்டும், 3-4மாதங்களில் கூட்டுப்பசளை தயாராகவிருக்கும் சாணி, சலம் ஊறிய மண் கிடைக்காவிடில் குவியலில் இடும் பொருட்களில் மூன்றிலொரு பங்கை தழை, குழை போன்ற மென்மையானவையாகவிருக்க வேண்டும் தழைகளைப் பச்சையாய் இடாது அவை வெயிலில் நன்கு வதங்கிய பின்னரே சேர்க்க வேண்டும்.

### கூட்டுப்பசளை தயாரிக்கும் புதியமுறை

இறக்குமதியாகும் வளமாக்கிகள் பொதுவாக நைதரசன் வகைகள் சிறப்பாயும் விலையில் சுத்தமாகவும் உயர்ந்துள்ள வேளையில் அவற்றிற்குப் பதிலாக ஓரளவிற்கேனும் உபயோகிக்கும் வகையில் கூட்டுப் பசளையைத் தயாரிக்கும்முயற்சி ஒரு புதிய உத்வேகத்தை இன்று அடைந்துள்ளது. கமத் தொழில்திணைக்களம் துரிதமான முறையில் அதைத் தயாரிக்கும் முறைகளைக் கண்டறிவதில் தீவிர நடவடிக்கை எடுத்து 15 நாட்களில் தயாரிக்கும் ஒரு முறையை அறிமுகப்படுத்துகின்றது குப்பை கூளத்திலுள்ள கடதாசி, பிளாஸ்டிக் பொருள் போன்றவற்றை நீக்கி கூடிய வரை துண்டங்களாக்கி பச்சையிலையுடன் 4:1 விகிதம் சொற்ப மண்ணை கூட்டுப் பசளையையும் கலந்த 8|6 அடி நிலப்பரப்பில் 6 அங்குலத்திற்கு ஒரு படையாக 08 படைகளைக்கொண்டு ஒரு ...

பெட்டிகள் தயாரிக்கப்படும். இப்பெட்டிகளின் அடித்தளம் நில மட்டத்தில் இருந்து உயர்ந்து இருக்கும். அதாவது, பெட்டிகளுக்குக் கால்கள் பொருத்தப்பட்டு இருக்கும். அத்துடன் அடிப்பாகம் துளைகள் உள்ளதாக (அடிப்பாகம் மூங்கில் சிலாகையினால் அல்லது கமுகம் சிலாகையினால் ஆக்கப்படும்) அமைக்கப்படும் இவ்வாறு துளைகள் கொண்டதாக அமைக்கப்படும்பொழுது இத்துளைகளினூடாக காற்று உட்புகுந்து கழிவுப் பொருட்களின் ஊடாக இயற்கையின் மேலெழும் இத்தகைய பெட்டிகளில் கழிவுப் பொருள்களை படைபடையாகப் பரவி வரும்பொழுது கழிவுப் பொருள்களைப் புரட்டி விடாமலேயே வெப்பம் வெளிவிடப்பட்டு கழிவுப் பொருள்கள் சிதைவடையும். சில வேளைகளில் நீர் தெளித்து விட்டால் மட்டும் போதுமானதாகும்.

இத்தகைய பெட்டி முறையில் கூலியாட் செலவு மீதப்படுவதுடன் கூட்டெருவை விரைவிலும் பெறலாம். அதாவது, ஆரம்பித்து 40 நட்களில் பெற முடியும். இந்த முறை குவியல் அல்லது குழி முறையில் போல் அல்லாமல் வெளியிடப்படும் வெப்பம் கூடிய காலத்திற்கு தங்குவதால் விரைவில் கூட்டெருவை பெறக் கூடியதாக இருக்கிறது நன்கு காப்பிடப்பட்ட பெட்டிகளில் கூட்டெருவைத் தயாரிக்கும்பொழுது காலநிலை பற்றி யோசிக்க வேண்டிய அவசியமில்லை வருடம் முழுவதுமே தொடர்ந்து தயாரிக்கலாம். ஈரவலய மலைநாடுகளில் காய்கறிச் செய்கையாளருக்கு பெட்டி முறையில் கூட்டெரு தயாரித்தல் உகந்த முறையாகும். குவியல் முறை உலர்வலயத்தில் கையாளப்படக் கூடிய மிக உகந்த முறையாகும்- உலர்வலயவிவசாயிகள் கூட்டெரு தயாரித்தலைப் பெருமளவில் தனித்து மேற்கொள்ள இயலாத பட்சத்தில்கூட்டுறவு அடிப்படையில்கூட்டாகமேற்கொள்ளலாம்

மேற்படி 30, 15, 2 அடிகளவில் ஒரு தனிக்குழி அல்லது குவியலில் இருந்து 5 தொன் கூட்டெரு பெறலாம். இப்படியான இரு குழிகள் அல்லது குவியலில் இருந்துபெறும் கூட்டெரு ஒரு ஏக்கருக்குப் போதுமானது. எனவே மேற்கூறப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்ட 10 தொன் கூட்டெருவில் இருந்து 65 கிலோ பொஸ்பரசு அமிலம், 65 கிலோ பெட்டாசும் பெறப்படலாம்.

### இதனால் ஏற்படும் நன்மைகள் அதிகம்

ஐ.தே.க. மட்டுமல்ல சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஆரம்பம் முதலே வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு முரணாகவே செயற்பட்டு வந்துள்ளது அப்பொழுது ஐ.தே.கவும், சுத. கட்சியும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே எனவும் வற்புறுத்தியும் வந்துள்ளன. ஆனால் அண்மையில் குறிப்பாக தென்மாகாணசபைத் தேர்தல் வெற்றியின் பின் அரசியற்தீர்வு பற்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சியால் பேசப்படுகின்றது.

இந்நிலையில் ஹமீத்தின் அறிவிப்பானது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் புதிய கொள்கையைப் பிரதிபலிப்பவையாக உள்ளனவா? அன்றி பழைய கொள்கையின் அடிப்படையிலானதா? அன்றி சுதந்திரக்கட்சியின் பொது முடிவே இதுதானா? என்பதே முக்கியமானதாகும். ஹமீத் தனது விளக்கத்திற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கடைப்பிடித்த கொள்கை ஆதாரமாகக் கொண்டமையே இவ்வாறான கேள்வி எழும்புவதற்குக் காரணமாகும், ஏனெனில் அண்மையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பிரச்சினை பரிசீலிக்கப்பட்டு சுமார் ஒரு வருடத்திற்கு மேலாகியுள்ளது. ஆனால் இன்று சுதந்திரக்கட்சி தனது இனப் பிரச்சினை தொடர்பான கொள்கையில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது போல் தெரிகின்றது.

இதற்காக சிறிலங்கா சுதந்திரக்கட்சி வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து தமிழர்களிடம் கொடுத்துவிடப் போகிறது என்பதல்ல. தமிழர் தாயகத்தை அங்கீகரிக்கப் போகின்றது என்றும் கூறவில்லை. ஆனாலும் இது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுக்கப்போகும் முடிவே இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வில் சுதந்திரக்கட்சி எந்தளவிற்குச் செல்லும் என்பதை காட்டக் கூடியதாகும்

ஆனால் இனப்பிரச்சினைக்கு தீர்வென்பது யார் விரும்பியென்ன விரும்பாதுவிட்டாலும் என்ன வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லாது இருக்கப் போவதில்லை. அதாவது தாயகம் சிதைக்கப்படுவதை தமிழர் அனுமதிக்கப் போவதில்லை. இந்த யதார்த்த நிலையினை ஐ தே கட்சி புரிந்து கொண்டிருப்பினும் யுத்தம் இராணுவத் தீர்வு என்பனவற்றில் இருந்து அதுவிடுபடப் போவதாகத் தெரியவில்லை ஆனால் சுதந்திரக்கட்சி அரசியல் தீர்வு சமாதானம் பற்றி பேசுவதினால் தமிழர் பிரச்சினை தீர்வின் அடிப்படையாக இதனைக் கொள்ள வேண்டும் இல்லாது விட்டால் சுதந்திரக்கட்சி மீண்டும் ஒருமுறை தமிழர்களை ஏமாற்றமுனைவதாகவே கொள்ள முடியும்

---

த்தில் 10 தொன் கூட்டுப் பசளை இட்டால்தான் சமமான பயனை எதிர்பார்க்கலாம். கூட்டெரு என்பது சேதனப் பசளையாக பாவிக்கப்படும் சேதனப்பொருள்கள் நுண்ணங்கித் தாக்கத்திற்கு உட்படுத்தி அவற்றில் உள்ள போசணைகளை தாவரங்கள் குறுகிய காலத்தில் நுகரக் கூடிய வகையில் அவற்றினை மாற்றியமைத்தலே கூட்டெரு வாக்கம் எனப்படும்,

நிலத்திற்கு இடப்படும் சேதனப் பொருள் எத்தகையதாக இருப்பினும் இறுதியில் உண்டாகும் மக்கு பெரிதும் ஒரே தன்மையுடையதாகவே இருக்கும்- கூட்டெரு வாக்கத்தின் போது நாம் இடுகின்ற சேதனப் பொருள்கள் வேறுபட்ட அளவில் காபன்|நைதரசன் விகிதத்தைக் கொண்டு இருப்பினும் காபன் கூடவாகவும் நைதரசன் குறைவாகவும், இருக்கும் போது நுண்ணங்கி தமது தாக்கத்தின் மூலம் காபனையளித்து காபனீரொட்சைட்டு வாயுவாக வெளியேற்றுகின்றது- ஆனால் நைதரசன் நுண்ணங்கி தனது உணவாக்கிக் கொள்கின்றது- இவைதாம் செத்து மடிவதன் மூலம் மீண்டும் அந்த நைதரசனை மண்ணில் சேர்க்கின்றன. எனவே இடப்பட்ட சேதனப் பதார்த்தத்தில் பெரிதும் நைதரசன் இழப்பு ஏற்படுவது இல்லை, இம்மாற்றம்தொடர்ந்து நடக்கும் போது காபனின் அளவு குறைந்து கொண்டு வரும் இதனால் காபன் நைதரசன் விகிதம் ஆரம்பத்தில் இட்டதை விட காபன் நைதரசன் விகிதம் 17;1 என்ற நிலையை அடையும் வரை இடப்பட்ட சேதனப் பொருளில் இருந்து நைதரசன் பயன்பட மாட்டாது, எனவே காபன் நைதரசன் விகிதம் கூடிய சேதனப் பொருள்கள் மரத்தூள்போன்றவற்றை இடும்போது அவை நீண்ட காலத்தின் பின்னரே தாவரங்களினால் பயன்படுத்தப்படுகின்றது-

| | | |
|---|---|---|
| கோதுமை வைக்கோல் | 0 6 | 80 |
| தென்னங்கோது கழிவு | 0 5 | 800 |
| உதிரும் இலைகள் | 0.4 | 45 |
| நெல் வைக்கோல் | 0 4 | 100 |
| கரும்பத் தண்டுகள் | 0,3 | 150 |
| மரத்தூள் உக்கல் | 0.2 | 200 |
| புதிய மரங்கள் | 0,1 | 500 |
| கடதாசி | இல்லை | ... |

## கூட்டெரு தயாரித்தல் (அடைப்பு முறை)

பெரும்பாலும் அடைப்பு முறையே கூட்டெரு தயாரிப்பதில் கையாளுகின்றார்கள் இப் பெயர் இந்தியாவில்முதன் முறையாக சித்திகரமாக தயாரித்த இடத்தின் பெயராகையால் அப்பெயரே இம்முறைக்கும் வழங்கப்பட்டுள்ளது இம்முறையினால் கூட்டெருவை குழியிலும், குவியல்களிலும் தயாரிக்கலாம். இதற்கு பாவிக்கும் பொருட்களாவனபயிர்ச்செய்கைகளைகள், புற்கள்முதலியவையாகும் ஏதும் பச்சைப் புற்களாகிய புற்கள், இலைகள் இரண்டு ஒரு நாட்களிற்கு வாட வைத்தும் பாவித்தல் வேண்டும். ஒவ்வொரு குழியிலும் 30' 15' 2 ஆழமும் கிழக்கு, மேற்கு திசையாகவும் அமைத்தல் வேண்டும்.

ஒவ்வொரு கிடங்கிலும் 6-8' உயரத்திற்கு சேர்க்கப்பட்ட பொருட்களை அடியிலிருந்து அடுக்கவும் மிகுதியாக 5' அடி பிரட்டுவதற்கு வசதியாக ஒரு பக்கத்தில் இடைவெளி விடுதல் வேண்டும். இந்த அடுக்கு தட்டில் மேல் கீழ்க்குறிப்பிட்ட கரைசலை தெளித்தல் அவசியம். ஒரு வாளி புதுசாணம் இரண்டு கை மரச் சாம்பல் 9 - 10 கலன்நீர் அத்துடன் கிடைக்குமானால் பட்டி நிலத்திலிருந்து பெறப்பட்ட ஒருவாண்சலம் உள்ள சுரண்டிய மண் 10 - 15 நாட்களுக்கு உக்கிய செய் பொருட்களையும் சேர்த்துப் பாவிக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட கரைசல் முக்கியமாக (என் தேவையெனில்) நுண்ணுயிர்கள் தங்கள் ஒழுங்கு சீரான சிதைவைப் பெறமுடியும்.

முதன் முதலாக குழிகளை 2 | 12 அடி உயரத்திற்குநிரப்பிய பின் 15 நாட்கள் சென்றதும் பிரட்டுதல் வேண்டும். இரண்டாம் பிரட்டுதல் மீண்டும் 15 நாட்கள் சென்ற பின்பும் மூன்றாவது திருப்புதல் இரண்டாவது திருப்பு மேலும் 30 நாட்கள் சென்றதும் செய்தல் வேண்டும். சிதைவை விரைவுபடுத்துவதற்கு இரண்டொரு கூடைகளை30 நாட்கள் சென்ற குவியலிலிருந்து பெற்றுச் சேர்த்துக் கொள்ளலாம் ஒழுங்காக நீர் ஊற்ற வேண்டும. மூன்றாம் முறை ஒழுங்காக திருப்பியதிலிருந்து 30 நாட்கள் சென்றதும் கூட்டெரு தயாராகி விடும்.

## குவியல் முறை

குவியலின் அகலம் 15 - 18 அடியாயும் உயரம் 2 அடியாயும் நீளம் தேவைக்கேற்பவும் இருக்கலாம். ஓர் அந்தத்தில் தொடங்கிகழிவுப்பொருட்கள் 15 அங்குலம் உயரம்வரை இட்டபின் ஒரு அங்குல உயரத்திற்குச் சாணியும், சலம் ஊறிய மண்ணையும் பரவி நன்கு நனையும் வரை நீர் தெளிக்க வேண்டும் நீரை அளவுக்கு மீறி ஊற்றக் கூடாது. திரும்பவும் அதே வகையில் குவியலின் மொத்த உயரம் $2\frac{1}{2}$ - 3 அடி வரும்வரை குப்பை, சாணி முதலானவற்றையும் மாறி மாறி இடல் வேண்டும். சிறிது காலத்தில் உயரம் குறையும்

3 - 4 நாட்களின் குவியலின் வெப்பம் 110 பாகை வரை ஏறும். அவ்வகை வெப்பநிலையில் பெரும்பாலான களைவிதைகளும் நோயுண்டாகும் அடிநிலப்பரப்பில் 6 அங்குலத்திற்கு ஒரு படையாக 08 படைகளைக்கொண்டு ஒரு நீள்சதுரக் குவியல் அமைக்கப்படும்ஒவ்வொருபடையை இட்டதும் சாணி தடிப்பாக கரைத்த நீரைத் தெளிப்பதற்கு சாணி கிடைக்காவிடின் சலம் ஊறிய மண்ணைத்தூவ வேண்டும் முடிவில் களிமண்ணை நீரிற் கலக்கி குவியலைக் கூடியவரை மூடவேண்டும்

குவியலை இடையிடையே பிரித்து காற்று நன்கு ஊடாகச் செல்லச் செய்தல் இம்முறையின்முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது ஆகவே குவியலை முதலில் 02 நாட்களின் பின்னரும் அடுத்த 4. 3, 2 நாட்களிலும் 04 முறைகள் பிரித்து பக்கத்தில் அதே விஸ்தீரணத்தில் குவிக்கவேண்டுமெனக் கூறப்படுகின்றது, அடிக்கடி குவியலைக் கிளறும் போது களை விதைகள் பயிருக்குத் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிர்கள் அழிபடக்கூடியளவிறகு வெப்பம் உயருமாவென்பதுஐயத்திற்கிடமயுள்ளது.

## பெட்டி முறை

வீட்டுத் தோட்டங்களுக்கும்' சிறு தோட்டங்களுக்கும் மேற்கூறிய முறையில் கூட்டெரு தயாரித்தல் சிறந்த முறையாக இருப்பினும் பெருமளவில் தயாரிக்கும்பொழுது அதிகளவு நீரும் நேரமும் கூலியாட்களும் தேவையாகும். கழிவுப் பொருள்களைப் புரட்டும் முறை இல்லாமலேயே விரைவில் சிதைவை ஏற்படுத்தக் கூடிய வேறு ஏதாவது வழி இருக்குமானால் கூட்டெரு தயாரிகரும் இம்முறையில் உள்ள பல கஷ்டங்களை தவிர்க்க முடியும் இந்தியாவில் கையாளப்படும் பெட்டி முறையில் கூட்டெரு தயாரிப்பதன் மூலம் இக் கஷ்டங்களைத் தவிர்க்க முடியும்.

இம்முறையில் கூட்டெரு தயாரிப்பதற்கு பலகைகள் அல்லது செங்கற்கள் கொண்டு

## இதனால் ஏற்படும் நன்மைகள் அதிகம்

### அவையாவன

1 கிழங்கு பயிரிடும்மண்வகைகளுக்கும் சேதனப்பசளைகள் அவசியமாகும். இரசாயனப் பசளைகள் மட்டும் பாவிக்குமிடத்து கிழங்குகள் பெருத்து விரைவில் பருவடையும் தன்மை ஏற்பட்டு சேமித்து வைக்கும் காலத்தில் அதிக பாதிப்புக்குள்ளாக நேரிடும் தனியே சேதனப் பசளைகளையோ அல்லது சேதன செயற்கை உரங்களையோ கூட்டாக இட்டுப் பயன் பெறுவோமாகில் அவைகளை நன்கு நீண்ட காலங்களுக்கு பழுதடையா வண்ணம் சேமித்து வைக்கலாம்.

2 நெல் உற்பத்தியிச் கூடயப்பான் தேசத்தைப் போன்று நீண்ட காலமாக இரசாயனப் பசளைகள் பாவிப்பதனால் விளைவுகள் குறைவதைக் கவனிக்க கூடியதாக உள்ளது யப்பான் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் இககுறையைசேதனப்பசளையும் இரசயனப் பசளையும் சேர்த்து இடுவதன் மூலம் நிவர்த்தி செய்யலாமெனக் கண்டுபிடித்துள்ளனர்

மேலும் இவை மண்ணின் இழையமைப்பை மாற்றியமைக்கின்றன, நீர்பற்று திறன் காற்றோட்டத்திறன் நுண்ணங்கிற்கு உணவு என்பனபோன்றவற்றை வழங்குகின்றன

1) நேரடியாக சேதன உரங்களை மண்ணுக்கு இடும்போது அவை நோய்களையும், களையும் விளை நிலத்தில் பரப்பி செலவை உண்டாக்கின்றன கூட்டெரு தயாரிப்பின் மூலம் இவற்றினை நிவர்த்தி செய்யலாம்

2) சில சேதன உரங்களை பச்சைசாணி, மரத்தூள் போன்றவை நேரடியாக பயிருக்கு இடும்போது பயிர் பாதிக்கப்படுகின்றது எனவே தீர்க்க கூட்டெருவாக்கல் முறை சிறந்தது

இவை மண்ணை வளப்படு

(2 ஆம்பக்கம் பார்க்க)

# ஜெயலலிதா அரசின் உறுதியை குலைக்க மத்திய அரசு முயலவில்லை

## - உள்துறை இணை அமைச்சர் கூறுகிறார்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அரசின் உறுதித் தன்மையை குலைப்பதற்கு மத்திய அரசு எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கூறினார்.

கர்நாடகத்தில்நேற்று செய்தியாளர்களிடையே பேசிய அமைச்சர், மத்திய அரசு தமிழ்நாட்டின் அ. தி. மு. க. அரசை கலைக்க முற்படுகிறது என ஐயப்படத்தேவையில்லை எனவும் ஜெயலலிதா இது குறித்து சந்தேகப்படத் தேவையில்லை எனவும் கூறினார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தமிழக அரசு எடுக்கும் எந்த முயற்சிக்கும் மத்திய அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் மேலும் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்காவிற்கு புதிய தேசியக் கொடி

(ஜோகனர்ஸ் பேர்க்)

தென்னாபிரிக்காவின் இனவெறிஆட்சிமுடிவுக்குவந்ததைக்குறிக்கும்முகமாக இதுவரை பறந்துவந்த தென்னாபிரிக்க தேசியக் கொடி நேற்று இறக்கப்பட்டது.

புதிதாக வடிவமைக்கப்பட்ட தென்னாபிரிக்கத் தேசியக் கொடி இதைத் தொடர்ந்து பறக்கவிடப்பட்டது. இக் கொடியில் கறுப்பு நிறம் பெரும்பான்மை இடத்தை பிடித்துள்ளது. முன்னதாக தென்னாபிரிக்காவை வெள்ளையர் மட்டும் ஆட்சி செய்யும் சட்டமூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியது.

## மே நாள் கலந்துரையாடல்

எதிர்வரும் மேநாளிற்கான ஒழுங்குகளைத் திட்டமிடவும் பரிசீலனை செய்யவுமென நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸின் வடமராட்சி, தென்மராட்சி, வலிமேற்கு, வலிவடக்கு-கிழக்கு, யாழ் - நல்லூர், தீவகம் பிரதேசத்தைச் சேர்ந்த பொறுப்பாளர்கள், உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் நடைபெறும். இதில் மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

## தபால் தரம் பிரிக்கையில் படம் பிடிப்பதற்கு ஏற்பாடு

தபால்கள் தரம் பிரிக்கப்படுவதில் புதிய முறைகள் கடைப்பிடிக்கப்பட இருப்பதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது வெளிநாட்டுத் தபால்கள், காசுக்கட்டளைகள், தபால்கட்டளைகள், ராப்டுகள் போன்றவற்றில் இடம் பெற்றுவரும் மோசடிகளைத் தவிர்ப்பதே இப்புதிய திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்படி கொழும்பு மத்திய தபால் தரம் பிரிக்கும் நிலையத்தில் ஏழு தொலைக்காட்கி கருவிகள் பொருத்தப்படவுள்ளன. இவ் ஏழு தொலைக்காட்சிக் கமெராக்களில் ஆறு வெளிநாட்டுக தபால் பொதிகள் சீல்பிரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்படுவதை படம்பிடிக்கும் ஏழாவது கமரா சுழற்சி கமராவாகசெயற்படும், வேலைகள்முடிவுற்றதும் ஒவ்வொரு கமராவையும் இயக்கி ஒவ்வொருவரும் செய்த வேலைகளைப் பார்க்க முடியும். இவ்விதம் தரம்பிரிக்கப்படும் தபால்கள் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 550 தபால் நிலையங்களுக்கும் இதற்கெனத் தயாரிக்கப்பட்ட மஞ்சள் நிற கன்வேஸ் பைகளில் போடப்பட்டு சீல் வைத்து அனுப்பப்படும் இதேபோல உள்ளூரிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் தபால்களும் தனியாகக்கையாளப்படும். அத்துடன் உள்நாட்டு வெளிநாட்டு தபால்கள் தனித்தனியே கையாளப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்,

## 90நாட்களில் கொல்லப்படுவீர் மாத்தளை மேயருக்கு மிரட்டல்

(கொழும்பு)

90 நாட்களினுள் தாம் கொலை செய்யப்படப்போவதாக தமக்கு மிரட்டல்கள் வந்துள்ளதாக மாத்தளை மேயர் ரஞ்சித் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இதேபோன்றே மாத்தளை நகரசபை உறுப்பினரான ரஸ்மீர் ஹூசைன் கொல்லப்படுவதற்கு முன்பும் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே வேளை ரஸ்மீர் ஹூசைன் கொலையை மட்டுமல்ல கொல்லப்பட்ட ஹூசைன் தம்மீது சுமத்திய குற்றச்சாட்டுகளையும் விசாரிக்க வேண்டும் என மேயர் அலுவிகார கூறினார். இவ் விசாரணை மூலம் தமது பெயர் மீது மறைந்த ஹூசைனினால்சுமத்தப்பட்ட களங்கம் அகன்றுவிடும் எனவும் மாத்தளை நகர மேயர் அலுவிகார கூறினார்.

## கூரே, நந்தா மத்தியூவிற்கு ஐ. தே. கவிலிருந்து கல்தா?

ஐ தே. கவிலிருந்து சிறிசேன கூரேயும், நந்தா மத்தியூவும் நீக்கப்பட்டு அவ்விடங்களுக்கு பிரேமதாசா ஆதரவாளர்களை நியமிக்க கட்சியின் உயர்பீடம் நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## காங்கேசனில் படைகுவிப்பு

பலாலி இராணுவ முகாமிற்கு கப்பல்கள் மூலம் படையினர் குவிக்கப்படுகின்றனர். கொழும்பிலிருந்து வரும் உணவுக் கப்பல்கள் மூலமும் படைகள் காங்கேசன்துறையில் தரையிறக்கப்படுகின்றனர்.

## கொழும்பில் பரீட்சை

மதுவரி உத்தியோகத்தர்கள், பாதுகாவலர்கள் ஆகியோரை ஆட் சேர்ப்புக்கான பரீட்சை கொழும்பில் மட்டும் தான் நடைபெறும் என மதுவரி ஆணையாளர் அறிவித்துள்ளார். மேலும் இப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்த முடியாதென அவர் அறிவித்துள்ளார் எனவும் யாழ் அரச அதிபரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

## பற்றரி கடத்த முயன்ற நால்வர் கைதாகினர்

வடபகுதிக்கு பற்றரிகளை கடத்த முயன்றதாக கூறப்பட்டு நால்வர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியாவிலிருந்து நொச்சி மோட்டைக்கு பற்றரிகளை கடத்த முயன்றதாக இவர்கள் கைதுசெய்யப்பட்டு கொழும்பு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் வவுனியா காட்டுப் பகுதியூடாக நொச்சி மோட்டைக்கு பற்றரிகளை கடத்திவந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கோவில் பிரச்சினையால் கோஷ்டி மோதல்

### 9 பேர் காயம்; வீடு சேதம்

(வடமராட்சி)

கோயில் விவகாரத்தில் எழுந்த கோஷ்டி மோதலில் இரு தரப்பினரிலும் கத்தி வெட்டு, தடியடிக்கு இலக்காகி ஒன்பதுபேர் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவத்தின்போது ஒரு வீடு, கடை ஒன்றும் சேதமடைந்தது. உடைமைகளும் நாசமாகின.

இச் சம்பவம் குடத்தனை பொற்பதியில் நேற்று முன் தினம் மாலை 3. 00 மணியளவில் நடைபெற்றது இடம்பெயர்ந்துஇப் பகுதியில் தங்கிவந்தவர்களுக்கும் அப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையிலேயே இம் மோதல் ஏற்பட்டது.

இம் மோதலின்போது வி. ஜெயபாலன், வி. வெண்ஸஸ், ந. தேவன், அ. ஞானமணி ஆகியோரும் அப் பகுதியைச் சேர்ந்தவர்களான இ. அரியதாஸ், யா. சின்னராசா, சி. குருசாமி, யோ. சுவாம்பிள்ளை, சு. அன்ரன் ஆகியோரும் காயமடைந்தவர்களாவர். இவர்களில் அ. ஞானமணி அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

இது சம்பந்தமாக இரு தரப்பினரும் நாகர்கோயில்காவல் துறையில் முறைப்பாடு செய்துள்ளனர். (யோ)


## தேவை

பின்வரும் வேலைகட்கு தகுதியானவர்கள் 30 04-94-ந் திகதி காலை 10 மணிக்கு நேரில் சமுகந்தரவும்.

1. கணக்காளர்
   (பத்திரிகைத்துறையில் முன் அனுபவமுள்ள கணக்காளர்கள் விரும்பத்தக்கது.
   வயது: 35—55 வரை
2. உதவிக் கணக்குப் பதிவுநர்
   வயது: 30 க்கு கீழ்
3. பக்கம் கட்டுனர்
   (1/2 அளவிலான பக்கம் வடிவமைத்துக் கட்டத் தெரிந்தவர்கள்)
   வயது; 30 க்கு கீழ்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

குறிப்பு: உரிய ஆவணங்களுடன் வரவும்.

மாறன் பதிப்பகம்
664, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9282)


## மருந்துபொருட்கள்விலை பன்மடங்காக அதிகரிப்பு

(நமது நிருபர்)

யாழ். நகர மருந்துக்கடைகளில் மருந்துப் பொருட்களின் விலைகள் பன்மடங்காக அதிகரித்து விற்கப்படுவது குறித்து மக்கள் பெரும் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட மருந்துகள் கூட மூன்று, நான்கு மடங்கு விலை கூட்டி விற்கப்படுகிறதாம் இதனால் இன்றைய காலகட்டத்தில் இவ்வளவு தொகைப்பணத்தினை மேலதிகமாக செலுத்தி அத்தியாவசிய மருந்துகளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாக பலர், நோயாளர் நலன்புரிச் சங்கத்திலும் மருந்து வியாபாரிகளிடமும் நேரடியாகவே சுட்டிக் காட்டியதை காண முடிந்தது

(ச)


யாழ். ஸ்ரீதர் திரையில்...

28 - 4 - 94 வியாழன் முதல்...

உங்கள் கண்ணெதிரில்...

போராளிகளும், மக்களும் இணைந்து வழங்கும்

நிதர்சனம் நிறுவனத்தின் சிறப்பு


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 04. 28 -வியாழன் இரவு

08, 01 ற்கு- சொல்லுங்கள் பார்க்கலாம்
08. 10 ற்கு - உரை- நில அடிநீரை தேக்குவோம்
08 20 ற்கு - உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் நம்பிக்கையே வாழவைக்கும்- உரையாடல்
08.30 ற்கு- செய்திகள்
08.40 ற்கு - ஏட்டிலிருந்து "மௌன வசந்தம்" என்ற நூலிலிருந்து பூச்சிகள் திருப்பித் தாக்குகின்றது எனும் கட்டுரையின் சில பகுதிகள்:
08.50ற்கு - மலரும் மொட்டுக்கள்

## ஆக்க முயற்சிப் போட்டி வருடாந்தம் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக் கல்வியில் மாணவர்களது ஈடுபாட்டை

பிக்கலாம் என தெரிவிக்கப் பட்டது.

மேலும் இப் போட்டிகளில்

## கற்பித்தல் தொழில் நுட்பம் 1000 ஆசிரியர் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

நூறு விகித கற்பித்தல் தொழில் நுட்பத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆசிரியர் பயிற்சியினை சுமார் ஆயிரம் முதன்மை ஆசிரியர்கள் பூர்த்தி செய்துள்ளனர்.

யாழ். கல்வித் திணைக்கள

செய்துஇத்திட்டத்தின் இறுதி மதிப்பீடு மேற் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (பா)

## சத்திர சிகிச்சை

சுதந்திரக்கட்சித் தலைவி

வெளியீடு

# காற்று வெளி

(முழு நீள வண்ணப்படம்)

தரமான கலைப் படைப்பின்
திறமான கருத்தோவியம்

★ மக்களோடு புலிகள்
★ சண்டைக் காட்சிகள்
★ நெஞ்சையுருக்கும் சம்பவங்கள்

உங்கள் இதயங்களில் இடம்பிடிக்கும்
இன்னும் பல அரிய கண்ணைக்கவரும்
வண்ணக் காட்சிகள்

மறவாதீர்கள் காற்றுவெளி
தவறாதீர்கள் பார்த்து மகிழ

கதை
வசனம்
நெறியாள்கை
ஞானரதன்

| ஒளிப்பதிவு | நடிகர்கள் | இசை |
|---|---|---|
| தவா | றியோ | பிரியராஜ் |
| திலகன் | இரட்ணவடிவேல் | முரளி |
| றியோ | பேபி சரோஜா | |
| | நிசாம | |
| | மற்றும் மலர் | |

தயாரிப்பு **நிதர்சனம்** (சி-9265)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

அதிகரிக்கும் முகமாக பாட சாலை ஆசிரியர் மாணவர்களிடையே ஆக்க முயற்சிப் போட்டி ஒன்று வருடாந்த நாட்காட்டிக்கு அமைவாக ஒழுங்குசெய்யப்படவுள்ளது.

இப்போட்டியில் மாணவர்கள் ஆசிரியர்கள் யாவரும் பங்குபற்றலாம். எத்தனை காட்சிப் பொருட்களும் சமர்ப்

பிரிவு ஒன்றில் ஆண்டு 7முதல் 8 வரையும் பிரிவு இரண்டில் ஆண்டு 9 முதல் 11 வரையும் மூன்றாம் பிரிவு ஆசிரியர்களுக்கானது எனவும் இப்போட்டிகளுக்கு வலய தொழில் நுட்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொறுப்பாக இருப்பார் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (பா)

## 16 அமைய ஊழியருக்கு நிரந்தர நியமனம்

யாழ் கல்வி வலயம்2இன்கீழ் இயங்கும் பாடசாலைகளில் கடமையாற்றும் பதினாறு அமைய நிவாரணப் பணியாளர்களிற்குரிய நிரந்தர நியமனக் கடிதங்கள் யாழ் கல்வி வலயம் 2க்கான வலயக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி அவர்களினால் வழங்கப் பட்டுள்ளது இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதம் 1-5-93 தொடக்கம் செயற்படும்படியாக வழங்கப்பட்டுள்ளது. நிவாரணப் பணியாளர்களாக பாடசாலைகளில்சுகாதார, தோட்ட, அலுவலகப் பணிபுரிந்த அமைய ஊழியர்களுக்கே இந் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. வலயம் 2ல் உள்ள பாடசாலைகளில் கடமை புரியும் 42 அமைய நிவாரணப் பணியாளர்களில் அமைய காவலாளிகளாக கடமை புரிபவர்களைத் தவிர்ந்த 16 பேருக்கே இந் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே சமயம் மிகுதியாக உள்ளவர்களுக்கும் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப் பட உள்ளதாகவும் யாழ் கல்வி வலயம் 2 தெரிவித்துள்ளது. (17)

### யாழ்

வழங்கவில்லை என்பதும், இனப்பிரச்சினை தீர்வுக்கு வெளியார் தலையீடு தேவையில்லை என ஜனாதிபதி தொண்டமானுக்கு அறிவுறுத்தியதும் தெரிந்ததே.

### க. பொ. த.

87 சதவீதத்தினரும் விவசாய பாடத்தில் 79 சதவீதத்தினரும், வர்த்தக பாடத்தில் 68 சதவீதத்தினரும் மரவேலை பாடத்தில் 65 சதவீதத்தினரும், உலோகவேலை, மனைப் பொருளியல், சித்திர பாடத்தில் முறையே 38, 60, 29 சதவீதத்தினரும் சித்தியடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (17)

### யாழ்வைவட்ட...

சுகாதார சீர்கேட்டினால், திரும்ப இந்நோய் பரவ ஆரம்பித்திருக்கிறது. பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (தி), (ச)

### குண்டு

வலியுறுத்திக் கூறியுள்ளது.

இதே சமயம் அண்மையில் ஹோட்டல்களில் குண்டு வெடிப்புக்கள் தொடர்பான கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவல்கள் குறித்து தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் கடந்த வெள்ளிக்கிழமை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

டுக்கள்

1994. 04. 29 வெள்ளி காலை

07.02 ற்கு- மாவீர வணக்கம்
07.15 ற்கு - விடுதலை கானங்கள்
07.30 ற்கு - செய்திகள்
07.35 ற்கு- பத்திரிகைச் செய்திகள்
07.40 ற்கு - தொடர்ந்து விடுதலை கானங்கள்

### வடமராட்சி

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அதே சமயம் வல்வெட்டித் துறை அரசினர் வைத்தியசாலையிலும் கொலராவுக்கு இலக்காகி சிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இங்கு சிகிச்சை பெறுபவர்களில் 12 வயதுக்குக் குறைந்த சிறுவர்களும் உள்ளனர். (யோ)

### ஜனாதிபதி

நடைபெறமுன்பே இத் தேர்தலில் ஐ. தே. க. தோல்வியுறும் என அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தேசிய புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான சேனக சில்வா தலைமையில் 144 பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட இந்த ஆய்வுக்குழு கடந்த ஜனவரியிலிருந்து தமது ஆய்வினை தொடங்கியிருந்தது. இவ்வாய்வின்போது தொண்டமான் ஐ. தே. கவுடன் சேர்ந்து தேர்தலில் பங்குபற்றுவார் என எடுத்துக் கொண்டே ஆய்வு செய்யப் பட்டது. ஆய்வின்படி சந்திரிகாவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் நான்குலட்சம் மேலதிக வாக்குகள் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. குழுவினர் ஆய்வை வடக்கில் மேற்கொள்ளவில்லை.

யாழ். கல்வித் திணைக்கள வலயம் - 1 ஐச் சேர்ந்த மேற்படி முதன்மை ஆசிரியர்களே மேற்படி பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.

சென்ற பாடசாலை விடுமுறைக் காலத்தில் சுமார் ஐந்து நாட்கள் இவர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்றன என வலயம் 1 கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த தவணைப் பெறுபேறையும்அடுத்த தவணை பெறுபேறையும் மதிப்பீடு

சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்று சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. உடல்நிலை பாதிப்படைந்த நிலையில் சிறிமாவோ இருப்பதால் இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப் படலாம் என நம்பப்படுகிறது

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை சவரிமுத்து

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை சவரிமுத்து 27-04-94ல் காலமானார். இவர் மாகிறேற்மேரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிஸ் மேரி ஜெம்மா, மேரிறீற்றா (கொழும்பு), யோசவ் (உப அதிபர் இளவாலை மெய்கண்டான் பாடசாலை) ஆகியோரின் மைத்துனரும், மரியதாஸ் (தர்சினி பாணகம் இளவாலை), சேவியர் (பிள்ளையார் பாணகம் மல்லாகம்), விக்ரர் (ஜேர்மனி). அன்ரன் (நிரோ பாணகம் வட்டுக்கோட்டை), யோசேப்பின் (வவுனியா), லூமின் (கனடா), பிரான்சிஸ்கா (கனடா), றெஜினா (டென்மர்க்), தர்சினி (யாழ். பல்கலைக் கழகம், கலைப்பீடம் 3-ம் வருடம்), மனுவெலா ஆகியோரின் அன்புத் தந்தையும், ராணி, மரியநாயகம், செல்வராணி, றோஸ்லிற்றா, வெல்சினி, பீற்றர், ஜெயந்தி, லெஸ்லி ஆகியோரின் மாமனாரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இறுதிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை (29-04-94) காலை 9.00 மணிக்கு சங்கானை புனித சலேசியார் ஆலயத்தில் இடம்பெறும்.

நிரோ பாணகம்,
அரசடி வீதி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (8154)

தகவல்:
ச.அன்ரன்
(மகன்)